6 APR 1961

ஆரம்பக்கல்வி

ஆரம்ப ஆசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை நிர்வாகிகள்
முன்னேற்றத்திற்கு உழைக்கும் இதழ்.

ஆசிரியர் : பி. வீரராகவன்

ஆண்டு சந்தா ரூ. 3] [தனி இதழ் அணா 4

மலர் 22 | மார்ச் 1961 | இதழ் 3

தவறாமல் நிறைவேற்ற வேண்டிய இரண்டு கோரிக்கைகள்

ஒரு கட்டிடம் செம்மையாகவும் உறுதியாகவும் இருக்கவேண்டுமானால் அதன் கடைக்கால் ஆழமாகவும் அழுத்தமாகவும் இருந்தாக வேண்டும்.

ஒரு மரம் எத்தகைய கடுங்காற்றுக்கும் அசையாமல் நிமிர்ந்து நிற்க வேண்டுமானால் அதன் வேர்கள் செம்மையாகவும் திண்மையாகவும் நிலத்தில் பதிந்திருக்க வேண்டும்.

ஒரு மனிதனுடைய வாழ்க்கை வலிவோடும் பொலிவோடும் திகழ வேண்டுமானால் அவனுடைய உடல் நோய் நொடியின்றி எஃகு போன்ற உறுதியுடன் இருந்தாகவேண்டும்.

வயல்களில் நெற் பயிர் தளதள வென்று வளர்ந்து பச்சைப் பசேலென்று பசுங் காட்சி வழங்கவேண்டுமானால் தேவையான அளவு தண்ணீர் அவ் வயல்களுக்குப் பாய்ச்சப்பட வேண்டும்.

இவற்றைப் போலவேதான் ஒரு நாடு பீடும் பெருமையும் மிகுந்ததாகத் திகழ வேண்டுமானால் அந் நாட்டின் கல்வித் துறை எழிலும் ஏற்றமும் மிகுந்ததாக விளங்கித் தீர வேண்டும். ஆம்! ஒரு நாட்டின் முன்னேற்றம், அந்த நாட்டின் கல்வியின் முன்னேற்றத்தையே பொறுத்திருக்கிறது என்பதை எவரும் மறுத்தல் இயலாது. எந்த அளவுக்கு ஒரு நாடு கல்வித் துறையில் ஓங்கி உயர்ந்து ஒளி வீசித் திகழ்கிறதோ அந்த அளவுக்குத்தான் அந்த நாட்டின் தொழில் துறையோ, வேளாண்மைத் துறையோ, பிற துறைகளோ செம்மையும் செழுமையும் வாய்ந்தனவாக இருக்க முடியும்.

இது உண்மை. ஆனால் இதுமட்டுமல்ல உண்மை- ஒரு நாட்டின் முன்னேற்றம் எவ்வாறு அந் நாட்டுக் கல்வியின் முன்னேற்றத்தைப் பொறுத்திருக்கிறதோ அவ்வாறே அக் கல்வியின் முன்னேற்றம், ஆரம்பக் கல்வியின் முன்னேற்றத்தையே பொறுத்திருக்கிறது. ஆரம்பக்கல்வி ஒழுங்கான வகையிலும் சிறப்பான முறையிலும் முன்னேறினால்தான் உயர் நிலைக் கல்வி தெளிவான நிலையிலும் திட்டமான வகையிலும் முன்னேறமுடியும். இந்த இருதிறக் கல்வியும் சிறப்புற அமையும்போதுதான் கல்லூரிக் கல்வி கவின் தரம் மிகுந்ததாக விளங்க முடியும். ஒரு நாட்டில் ஆரம்பப் பள்ளிக்கூடங்களே இல்லை என்றால் உயர்நிலைப் பள்ளிக்கூடங்களோ, கல்லூரிகளோ எவ்வாறு தோன்ற முடியும்?

இத்தகைய சிறப்பும் செல்வாக்கும் மிக்க ஆரம்பக் கல்வியைத் தமிழகத்தில் முதன் முதல் பரப்பிய பெருமையும் புகழும் படைத்தவர்கள் தனியார் பள்ளி நிர்வாகிகளே ஆவர். அரசாங்கமும் சரி, நகராண்மைக் கழகம் முதலிய உள்ளாட்சி மன்றங்களும் சரி, இந்தத் துறையில் இறங்குவதைப்பற்றி எண்ணிப் பார்ப்பதற்கு முன்னரே, துணிச்சலோடும் தைரியத்தோடும் இந்தத் துறையில் ஈடுபட்டு, ஆங்காங்கே ஆரம்பப் பள்ளிக்கூடங்களைத் தொடங்கி, நாடெங்கும் கல்வி நீரோடையைப் பாய்ச்சிய அந்த ஆன்றோரையும் சான்றோரையும் எவ்வளவு பாராட்டினாலும் தகும். அவர்கள் இந்தத் துறையில் ஈடுபட்டபோது, அவர்களை நோக்கி அடுக்கடுக்காக வந்தவை ஆதரவு மொழிகளும் அன்புச் சொற்களும் அல்ல—கேலிச் சொற்களும் கண்டனக் கணைகளும்தான்.

"பள்ளிக்கூடம் தொடங்குகிறாராம் பள்ளிக்கூடம்! யாருக்கய்யா வேண்டும் பள்ளிக்கூடம்!"

"இழுத்துப் பூட்டச் சொல்லய்யா அவருடைய கல்விக் கூடத்தை! யாரைக் கேட்டுக் கொண்டு தொடங்கினார் அவர் அப் பள்ளிக் கூடத்தை?"

"பார்த்தால் பெரிய மனிதரைப்போல இருக்கிறாரே—அவருக்கு ஏனய்யா இந்த வீண் வேலை?"

"கையிலே நாலு காசு இருந்தால் இரண்டு ஏக்கர் நிலத்தை வாங்கிப் போட்டு வேளாண்மை செய்தாலாவது பலன் கிடைக்கும்! அதை விட்டுவிட்டுப் பள்ளிக்கூடம் தொடங்கியிருக்கிறாரே இந்தப் பரிதாபத்திற்குரியவர்!"

இப்படித்தான் பலரும் பேசினர் — பேசினமா—ஏசினர்; கைகொட்டிச் சிரித்தனர்; கிண்டல் பாணங்கள் தொடுத்தனர்; எதிர்ப்பு ஒலிகள் கிளப்பினர். இத்தனைக்கும் அஞ்சாமல்தான் அந்தப் பெரியவர்கள் பள்ளிகளைத் தொடங்கிச் சிறப்பாக நடத்தி நாட்டுக்கு நல்ல தொண்டு புரிந்தனர். அவர்கள் இந்தப் பணியில் ஈடுபட்டு இந்தத் துறையை எழில் மிகுந்ததாகவும் சிறப்பு நிறைந்ததாகவும் மாற்றி அமைத்த பின்னரே அரசாங்கத்தாரும் உள்ளாட்சி மன்றங்களும் ஆரம்பப் பள்ளிகளைத் தொடங்க முன் வந்தனர்.

தமிழ் நாட்டில் ஆரம்பக் கல்வியானது சென்ற நூற்றாண்டில் தோன்றிப் பரவிய இந்த வரலாற்றை நினைவில் நிறுத்திப் பார்த்தால் தான் தனியார் பள்ளி நிர்வாகிகளுக்குத் தமிழ் நாடு எந்த அளவு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறது என்பது தெள்ளத் தெளிவாக விளங்கும். உண்மை நிலையை, மறைக்காமலும், மறுக்காமலும் கூட்டாமலும் குறைக்காமலும் சொல்வதானால், தமிழ் நாட்டில் ஆரம்பக் கல்வியானது இன்றைய தினம் பெற்றுள்ள பெருமைக்குரிய வளர்ச்சியின் பெரும்பகுதி, தனியார் பள்ளி நிர்வாகிகளின் ஓயாத உழைப்பால் விளைந்த பயன் என்றே கூறவேண்டும். வேண்டுமென்றே நாம் இட்டுக் கட்டிக் கூறும் கற்பனைச் சாடு அல்ல இது. வரலாற்றுச் சுவடி தெரிவிக்கும் அசைக்கமுடியாத உண்மை.

தமிழகத்தில் ஆரம்பக் கல்வி இதுவரை பெற்றுள்ள வளர்ச்சி பூரிப்புக்கும் பெருமைக்கும் உரியதுதான். ஆனால் அது இன்னும் பெற்றுத் தீரவேண்டிய வளர்ச்சி, நம் சிந்தனை வளத்திற்கும் செயல் திறத்துக்கும் ஓர் அறைகூவல் எனத் தக்கது ஆகும்.

தமிழகத்து ஆரம்பக் கல்வியானது, அது பெறவேண்டிய வளர்ச்சி முழுவதையும் பெற்று, அடையவேண்டிய சிறப்பு அவ்வளவையும் அடைந்தாக வேண்டுமானால், அரசாங்கத்தாரின் நன்

முயற்சியும், உள்ளாட்சி மன்றங்களின் ஒத்துழைப்பும் இருந்தாக வேண்டும். ஆனால் அவை மட்டும் போதா. தனியார் பள்ளி நிர்வாகி களின் பழுத்த அனுபவமும் கிடைத்தாக வேண்டும். இந்த மூன்று சாராரின் உழைப்பும் அனுபவமும் அறிவுத் திறமும் ஒன்றாக இணைந்து பயன்பட்டால்தான் ஆரம்பக்கல்வியானது ஓங்கி உயர்ந்து செழித்து வளர்ந்து சிறப்புற்றுத் திகழமுடியும்.

இந்த உண்மைகளையும் நிலைமைகளையும் எண்ணிப் பார்க்கும் எவரும், ஆரம்பக் கல்வியின் வளர்ச்சிக்காக அரும்பணியாற்றியுள்ள தனியார் பள்ளி நிர்வாகிகளுக்கு ஊக்கமும் உற்சாகமும் உறுதுணையும் போதுமான பண உதவியும் புரியவேண்டியது அரசாங்கத்தின் தனிப்பெருங்கடமை என்பதை ஒருநாளும் மறுக்கமுடியாது. ஆனால், என்ன காரணமோ தெரியவில்லை, சென்ற ஐந்தாறு ஆண்டு களாகவே, தனியார் பள்ளி நிர்வாகிகளால் தங்கள் பள்ளிக்கூடங்களை ஒழுங்காக நடத்திச் செல்லமுடியாத அளவுக்கு, தொல்லைகளும் துயரங்களும் இடுக்கண்களும் ஆபத்துக்களும் ஏற்பட்டபடி இருக் கின்றன. குறிப்பாகவும் சிறப்பாகவும், ஐந்தாவது வகுப்பு வரை எல்லா மாணவர்களுக்கும் இலவசக் கல்வி என்னும் திட்டம் வந்தது முதல், அவர்களுடைய நிலை மிகுந்த வேதனைக்கு உரியதாக ஆகி யிருக்கிறது.

எல்லா மாணவர்களுக்கும் கல்வி இலவசமாக அளிக்கப்பட வேண்டும் என்னும் உத்தரவை அரசாங்கத்தார் பிறப்பித்துவிட்ட காரணத்தால், பள்ளிக்கூடத்தை நடத்துவதற்குத் தேவையான எல்லாச் செலவையும் அரசாங்கத்தாரே மேற்கொள்வதுதான் நியாயம்; முறை; ஒழுங்கு. ஆனால் அரசாங்கத்தாரோ, என்ன காரணத்தாலோ அவ்வாறு செய்ய மறுக்கிறார்கள். பள்ளிக்கூடம் நடத்துவதற்குத் தேவையான எல்லாச் செலவுகளையும் அவர்கள் ஏற்காமல் மிக மிகச் சிறு தொகையை மட்டுமே தனியார் பள்ளி நிர்வாகிகட்குத் தந்து வருகிறார்கள்.

மாணவர்களிடமிருந்தோ கட்டணம் வசூலித்தல் கூடாது ஆகும் செலவில் அரசாங்கத்தார் ஏற்றுக் கொள்வதோ, ஒரு பகுதி மட்டுமே. அப்படியானால் மிகுதியுள்ள செலவையெல்லாம் அவர்கள் எங்கிருந்து ஈடு கட்டுவது? இதுதான் தனியார் பள்ளி நிர்வாகிகளின் உள்ளங்களை இப்போது மிரட்டிவரும் பிரச்சினை.

ஆரம்பப்பள்ளிகளின் ஆசிரியர்கட்குரிய ஊதியம் முழுவதை யும் அரசாங்கத்தார் தந்துவிடுகிறார்கள். மிச்சமுள்ள பல்வேறு

செலவுகளுக்காக, ஆசிரியர்களின் புதிய அடிப்படை ஊதியத்தில் பத்து சத விகிதத்துக்கு மேற்படாத ஒருதொகையை நிர்வாகஉதவித் தொகையாக அளிப்பதாக அவர்கள் தெரிவித்துள்ளார்கள். நான்கு ஹையர் கிரேடு ஆசிரியர்களும், ஒரு செகண்டரி கிரேடு ஆசிரியரும்கொண்ட ஆரம்பப்பள்ளியில் அந்த ஐந்து ஆசிரியர்களின் மொத்த அடிப்படைஊதியம் ரூ. 350 ஆகிறது, இதில் 10 சத விகிதம் என்பது ரூ. 35 ஆகும். அரசாங்கத்தார் அளிக்கக்கூடிய இந்த 35 ரூபாயில் ஆரம்பப் பள்ளியின் எல்லாச் செலவுகளையும் சரிக்கட்ட இயலுமா என்பதைக் கவனிப்போம்.

ஐந்து வகுப்புகள் கொண்ட ஓர் ஆரம்பப்பள்ளிக்குக் கட்டிட வாடகை (5 அறைகள், 1 அலுவலக அறை உட்பட) மாதம் ஒன்றுக்கு ஏறத்தாழ ரூ. 80.

பிள்ளைகளைப் பள்ளிக்கு அழைத்துவரும் ஆயாக்களின் ஊதியம் ரூ. 15.

பள்ளிக் கட்டிடத்தைத் துப்புரவு செய்வோரின் ஊதியம் ரூ. 5.

தோட்டிகளின் ஊதியம் ரூ. 5.

கல்விப் பயிற்சிக்குத் தேவையான கருவிகள்—பண்டங்கள் வாங்குதல் மற்றும் பிற செலவுகள் ரூ. 15.

ஆசிரியர்களின் நல்வாழ்வு நிதிக்கு (P.F) நிர்வாகிகள் செலுத்த வேண்டிய பங்கு ரூ. 10.

ஆக மொத்தம் மாதந்தோறும் 5 வகுப்புகள் கொண்ட ஓர் ஆரம்பப் பள்ளிக்கு ஆகும் செலவு ரூ. 130 ஆகிறது.

அரசாங்கத்தார் தருவதாகக் கூறுகிற பத்து சத விகித உதவித் தொகையோ ரூ. 35 தான்.

ஆகவே அரசாங்கத்தார் தருகிற தொகையைக்கொண்டு பள்ளிக் கூடச் செலவு முழுவதையும் ஈடுகட்டுவது இயலாத செயல் என்பது வெள்ளிடை மலையென விளக்கமாகிறது. அரசாங்கத்தார் தருகிற உதவித் தொகையைக் கொண்டு கட்டிட வாடகையைக்கூட முழுமையாகச் செலுத்த இயலாது என்பது தெளிவு. இந்த நிலையில் பிற செலவுகளையெல்லாம் நிர்வாகிகள் எவ்வாறு செய்வது?

சென்னை மாவட்ட உதவி பெறும் ஆரம்பப்பள்ளி நிர்வாகிகள் சங்கத்தார் அண்மையில் தமிழ்நாட்டுக் கல்வியமைச்சரைப் பேட்டி கண்டு ஒருமுறையீட்டுத் தாளைத் தந்துள்ளனர். அந்தத் தாளின் வழி அவர்கள் கேட்டுள்ள கோரிக்கைகள் இரண்டுதான்.

1. தனியார் நடத்தும் மான்ய உதவி பெறும் எல்லாப் பள்ளிகளுக்கும் கட்டிட வாடகை முழுவதும் அரசாங்கம் கொடுக்க வேண்டும்.

2. வாடகை தவிர்த்த பிற நிர்வாகச் செலவுகளுக்கான மான்யத் தொகையாக, ஆசிரியர்களின் அடிப்படை ஊதியத்தில் 10 சத விகிதத்தை, எந்தவிதமான வெட்டுமின்றி, எல்லாப் பள்ளிகளுக்கும் ஓரே நிலையில் தரவேண்டும்.

இந்த இரண்டு கோரிக்கைகளும் மிக மிக நியாயமானவை என்பதை நியாய உணர்ச்சி படைத்த அத்தனைபேரும் ஒப்புக்கொள்வார்கள்.

5 வகுப்புகளும் 5 ஆசிரியர்களும் கொண்ட ஓர் ஆரம்பப் பள்ளிக்குக் கிடைக்கக்கூடிய 10 சத விகித உதவித் தொகை ரூ. 35 ஆக இருக்கும் என்பதை மேலே எடுத்துக்காட்டி இருக்கிறோம்.

அதுபோலவே அத்தகைய பள்ளிக்கூடத்திற்குக் கட்டிட வாடகையாகக் கிட்டத்தட்ட ரூ. 80ம், பிற பல செலவுகளுக்காக ரூ. 50ம் தேவைப்படும் என்பதையும் நாம் மேலே எடுத்துக்காட்டி யுள்ளோம்.

ஆகவே, அரசாங்கத்தார் பத்து சத விகித உதவித்தொகை தருவதோடுகூட, ஒவ்வொரு பள்ளிக்கூட நிர்வாகியும் கட்டிட வாடகையாகச் செலுத்தும் தொகையை அப்படியே உதவித் தொகையாகத் தருவதே நியாயமாகும்.

சென்னை மாவட்ட உதவிபெறும் ஆரம்பப் பள்ளி நிர்வாகிகள் சங்கத்தார் தெரிவித்துள்ள கோரிக்கைகள் மிகவும் குறைந்த அளவு

கோரிக்கைகளாகும். இந்தக் கோரிக்கைகளை அரசாங்கத்தார் அப்படியே நிறைவேற்றித்தந்தால்தான் தனியார் நிர்வாகிகளால் ஆரம்பப் பள்ளிகளைத் தொடர்ந்து நடத்திச் செல்லமுடியும்.

இன்னொரு மிக முக்கியமான பிரச்சினையையும் இந்த நேரத்தில் சுட்டிக்காட்டவேண்டியது நம்முடைய கடமையாகும். அரசாங்கத்தார் தருகிற பத்து சத விகித உதவித் தொகையே மிகமிகக் குறைவாக இருக்கிறது என்பதை எண்ணித் தனியார் பள்ளி நிர்வாகிகள் வேதனைப் பட்டுக்கொண்டிருக்கும் நிலையில், பல கல்வி அதிகாரிகள், நடைமுறையில் அந்த உதவிக்கான அங்கீகாரத்தை அளிக்கும்போது, அதனை இன்னும் குறைத்து, 5 சதவிகிதம், 6 சத விகிதம், 7 சத விகிதம் என்கிற அளவில் உதவியை நிறுத்தி விடுகிறார்கள். வெந்த புண்ணில் வேல் செருகுவதுபோன்ற வேதனை மிக்க நிலை இது. இந்த நிலையை, எக்காரணத்தை முன்னிட்டும் நீடிக்கவிடலாகாது அரசாங்கத்தார். பத்து சத விகித உதவித் தொகையானது, எந்தவித வெட்டுமின்றி எல்லாப் பள்ளிக்கூடங்களுக்கும் கிடைக்கும் என்பதைத் தெள்ளத் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் அரசாங்கத்தார் அறிவித்துவிடவேண்டும். அப்படி அறிவித்தால்தான், கல்வி அதிகாரிகள் அந்தத் தொகையை மேலும் குறைத்துவிடுகின்ற வருந்தத் தக்க நிலைமை நீடிக்காது.

உதவி பெறும் பள்ளி நிர்வாகிகளின் கோரிக்கைகள் இரண்டையும் அன்புகூர்ந்து உடனடியாக நிறைவேற்றித் தாருங்கள் என்று தமிழ்நாட்டு ஆட்சியாளர்களை மீண்டும் மீண்டும் கேட்டுக்கொள்கிறோம்.

தமிழ்நாட்டின் ஆரம்பக் கல்வியானது ஓங்கி வளரவேண்டுமானால், அப்படி வளர்வதன் மூலமாக இந்த நாடு சிறப்பும் செல்வாக்கும் பெற்றுத்திகழவேண்டுமானால், இந்தக் கோரிக்கைகளைத் தவறாமல் நிறைவேற்றவேண்டியது அரசாங்கத்தாரின் தனிப் பெருங் கடமை என்பதை யாரே மறுக்கமுடியும்?

———

கல்வித் துறை இயக்குநருக்கு நம் பாராட்டு

தமிழ் நாட்டு அரசாங்கத்தின் கல்வித்துறை இயக்குநர் திரு நெ. து. சுந்தரவடிவேலு அவர்களுக்கு அண்மையில் இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களால் "பத்மஸ்ரீ" என்னும் பட்டம் வழங்கப்பட்டிருப்பது நண்பர்கள் அனைவரும் அறிந்த செய்தியாகும். இந்த உயரியபட்டத்தைப் பெற்றமைக்காகத் திரு சுந்தரவடிவேலு அவர்களை நாம் மனமாரப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறோம். பெருமையும் புகழும் வாய்ந்த இந்தப் பட்டத்தைப் பெறுவதற்குரிய எல்லா வகைத் திறமைகளும் தகுதிகளும் வாய்க்கப் பெற்றவர் திருவாளர் நெ. து. சுந்தரவடிவேலு என்பதை எவரும் மறுக்கமுடியாது.

சுந்தரவடிவேலு அவர்கள் கல்வித்துறை இயக்குநர் பொறுப்பை ஏற்ற பிறகு ஆரம்பக் கல்வியின் விரைவான வளர்ச்சியை முன்னிட்டுப் பல அரிய திட்டங்களையும் ஏற்பாடுகளையும் மேற்கொண்டுள்ளார்கள். அவற்றில் சிறப்பாகக் குறிக்கத்தக்கவை இரண்டு திட்டங்களாகும். ஒன்று, இலவச மத்திய உணவுத் திட்டம். மற்றொன்று, இலவசச் சீருடை வழங்கும் திட்டம்.

இந்த நாட்டில் ஆரம்பக் கல்வியைப் பயில வேண்டிய வயதுடைய பிள்ளைகளில் எண்ணற்றோர் பள்ளிகளிற் சேராமல் இருக்கின்றனர் என்பது அனைவரும் அறிந்த உண்மை. அவர்கள் அப்படிச் சேராமல் இருப்பதற்குப் பற்பல காரணங்கள் உண்டு. அவற்றுள் மிக முக்கியமான காரணங்கள் இரண்டு. ஒன்று, அந்தப் பிள்ளைகள் அனைவரும் பரம ஏழைகளாக இருக்கும் காரணத்தால் அவர்களுக்குப் போதுமான உணவு கிடைக்காதது. மற்றொன்று, பள்ளிக்கூடம் வந்து செல்வதற்குத் தேவையான ஒழுங்கான உடை அவர்களுக்கு இல்லாதது. ஆரம்பப் பள்ளிகளிற் பயிலவரும் ஏழைப் பிள்ளைகள் அனைவருக்கும் இலவச உணவும் உடையும் அளிக்கப்படுமானல் பள்ளி செல்வதற்குரிய வயதுடைய பிள்ளைகள் அனைவரும் பள்ளிக்கு வருவர் என்பதில் ஐயமில்லை.

இந்த அடிப்படை உண்மையை நன்கறிந்த நல்லறிவாளர் திரு சுந்தரவடிவேலு அவர்கள் ஆரம்பப் பள்ளிப் பிள்ளைகள் அனைவருக்கும் இலவச உணவும் உடையும் அளிப்பதற்குரிய மக்கள் இயக்கம்

ஒன்றைச் சில ஆண்டுகட்குமுன் தொடங்கினார்கள். தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் கல்விச் சீரமைப்பு மாநாடுகள் பலவற்றைக் கூட்டுவித்து, அம் மாநாடுகளின் வாயிலாகப் பொதுமக்களிடமிருந்து பணமாகவும் பண்டமாகவும் நன்கொடைகள் திரட்டி, அந்நன் கொடைகளைக் கொண்டு, ஏழைப்பிள்ளைகள் ஆயிரமாயிரவருக்கு இலவச உணவும் உடையும் அளித்தற்குரிய ஏற்பாடுகளைச் செய்வித்துள்ளார். இளகிய இதயம் படைத்த அந்த இன்சொல்லாளர் கல்விச் சீரமைப்பு மாநாடுகளின் அமைப்பி லும் போக்கிலும், இலவச உணவு உடை இயக்கத்தின் நடைமுறையி லும் சிற்சில குறைபாடுகளும் கருத்து வேறுபாடுகளும் உண்டு என்றாலும் அந்த இயக்கங்களின் அடிப்படை நோக்கம் சிறந்தது—சீர்மிகுந்தது—உயர்ந்தது—உத்தமப்பண்பு மிகுந்தது என்பது, எவ ரும் ஏற்கும் உண்மை

தமிழ்நாட்டில் மொத்தம் உள்ள 26768 ஆரம்பப் பள்ளிகளில் 26,289 பள்ளிகளில் மதிய உணவுத் திட்டம் செயல்படுகிறது என் பதையும், இதன்பயனாகப் பத்து இலட்சம் குழந்தைகள் இலவச உணவு கொள்கின்றனர் என்பதையும் எண்ணிப் பார்க்கும்போது, ஆரம்பக் கல்வியின் வளர்ச்சியில் ஆர்வம் படைத்த எவரும் பூரிப்பு அடையாமல் இருக்கமுடியாது. அதுபோலவே தமிழகத்தில் இதுவரை 3,36,470 குழந்தைகட்கு இலவசச் சீருடை வழங்கப் பட்டிருக்கிறது என்பதை நினைக்கும்போது செந்தமிழ் நாட்டுச் சிறுவர்தம் முன் னேற்றத்தில் ஈடுபாடு கொண்ட அனைவர் உள்ளமும் இன்பத்தால் துள்ளிக் குதிக்கும் என்பதில் ஐயமில்லை.

இத்தகைய சிறந்த திட்டங்களைத் தீட்டி, இத் தமிழகத்தின் இளைஞர்தம் எதிர்காலத்திற்குப் புதியதோர் பொலிவையும் வனப் பையும் அளித்துள்ள அருஞ்சிறப்புடைய சுந்தரவடிவேலு அவர்க ளைப் "பத்மஸ்ரீ" பட்டம் தேடிவருவதில் வியப்பென்ன இருக்க முடியும்? பாராட்டுப் பட்டம் பெற்ற கல்வித்துறை இயக்குநரை, ஆயிரமாயிரம் ஆரம்ப ஆசிரியர்களைப் போலவே, பல நூற்றுக் கணக்கில் உள்ள உதவி பெறும் ஆரம்பப் பள்ளி நிர்வாகிகளும் மன மாரப் பாராட்டுகின்றனர்; வாயாரப்போற்றுகின்றனர்; மீண்டும் மீண்டும் வாழ்த்தி மகிழ்கின்றனர். அவர்கள் அனைவருடைய மகிழ்ச் சியிலும் பாராட்டிலும் போற்றியுரையிலும், "**ஆரம்பக் கல்வி**" தன் மகிழ்ச்சிப் பெருக்கையும் இணைத்துக்கொள்ள விழைகிறது.

தமிழ் நாட்டு ஆரம்பக் கல்வியின் வளர்ச்சிக்காக அருந் தொண் டுகள் பல புரிந்துள்ள இயக்குநர் அவர்கள், இன்னும் ஓர் தொண்

டையும் அன்புடன் செய்துமுடித்தால், அவருடைய கல்வித்தொண்டு முழுமை அடையும் என்பதை இந்நேரத்தில் எடுத்துக் காட்டாமல் இருக்கமுடியவில்லை. ஐந்தாவது வகுப்புவரை எல்லா மாணவர்களுக்கும் இலவசக் கல்வி என்னும் திட்டம் நடைமுறைக்கு வந்த சென்ற இரண்டு ஆண்டுகளாக உதவிபெறும் தனியார் ஆரம்பப் பள்ளிகள் அரசினர் அளிக்கும் மிகக்குறைந்த நிர்வாக உதவித் தொகையைக் கொண்டு தங்கள் முழு நிர்வாகச் செலவையும் சரிக்கட்ட இயலாமல் திண்டாடித் தத்தளித்துக் கொண்டிருப்பதையே நாம் இங்குக் குறிப்பிட விரும்புகிறோம். ஆரம்பக்கல்வியானது இந்த நாட்டில் ஓங்கி வளர வேண்டுமானால் தனியார் பள்ளிகள் சிறப்புடன் நடைபெறவேண்டுமல்லவா? தனியார் பள்ளிகள் எழிலோடும் ஏற்றத்தோடும் விளங்கவேண்டுமானால் அவற்றின் நியாயமான செலவுக்கு ஏற்ற வரவு இருந்தாகவேண்டும் அல்லவா? அரசாங்கத்தார் தற்போது அளித்துவருகிற பத்து சதவிகித நிர்வாக உதவித்தொகையைக்கொண்டு நியாயமான செலவுகள் அனைத்தையும் ஈடுகட்ட முடியவில்லை அல்லவா? ஆகவேதான் அந்தப் பள்ளி நிர்வாகிகள் பணிவன்போடு வேண்டுவதைப்போல, அரசினர், பள்ளிக்கூடக் கட்டிட வாடகை முழுவதையும் வாடகை உதவித் தொகையாகத் தருவதோடு, ஏனைய செலவுகட்காகப் பத்து சத விகித நிர்வாக உதவித் தொகையை எந்தவித வெட்டும் இன்றி எல்லாப் பள்ளிகளுக்கும் ஒரே நிலையில் தரவேண்டும் என்றும் நாம் கேட்டுக்கொள்கிறோம். கல்வித்துறை இயக்குநர் அவர்கள் மிக நன்றாக அறிந்த உண்மைகளே இவை. இந்தத் துறையிலும் அவர்கள் தம் இதயத்தைச் செலுத்தி, நல்லதோர் ஏற்பாட்டை உருவாக்கித் தருவார்களானால், நாம் முன்னரே குறிப்பிட்டுள்ளதைப்போல, அவர்களுடைய ஆரம்பக் கல்வித்தொண்டு முழுமை எய்தும் என்பது உறுதி.

தனியார் பள்ளி நிர்வாகிகளின் இந்த மிக நியாயமான கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு கல்வித்துறை இயக்குநர் அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொண்டு, அவர்கட்கு நம் பாராட்டுகளை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறோம்.

வாழ்க திரு சுந்தரவடிவேலு! வெல்க அவர்கள்தம் ஆரம்பக் கல்வித் தொண்டு!

சென்னை மாவட்ட உதவி பெறும் ஆரம்பப் பள்ளி நிர்வாகிகள் சங்கம்

சென்னையில் கட்டிட வாடகையின்றிப் பள்ளி நடத்த இயலுமா ?

அண்மையில், இச் சங்கத்தால் தமிழ் நாட்டுச் சட்டமன்ற உறுப்பினர் கட்கு அளிக்கப்பட்ட விண்ணப்பம் :-

அன்புடையீர் !

தமிழ் நாட்டு சட்டசபை உறுப்பினர்களுக்கு முதற்கண் எங்கள் நன்றி கலந்த வணக்கங்கள்.

1959-60 ஆம் ஆண்டில் இலவச ஆரம்பக் கல்வித் திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்ததும், அத்திட்டத்தை நிர்வாகிகளாகிய நாங்கள் ஆதரித்து அரசாங்கத்தாருடன் ஒத்துழைத்து நடத்தி வந்தோம். பள்ளி ஆசிரியர்கள் சம்பளம் முழுமையும் அரசாங்கம் மாதாமாதம் கொடுத்து வந்தது. பள்ளியின் இதர செலவுகளுக்காக நிர்வாக மான்யமாக ஆசிரியர் அடிப்படைச் சம்பள விகிதத்தில் 15 சதவிகிதம் கொடுப்பதாக வாக்களித்தனர். ஆனால் அவ்வாண்டு இறுதியில் பல காரணங்கள் காட்டி ஒரு சில பள்ளிகளுக்குத்தவிர பெரும்பாலான பள்ளிகளுக்கு மான்யம் வழங்கவில்லை. இருந்த போதிலும் 1960-61 ஆம் ஆண்டிலும் பள்ளியைத் தொடர்ந்து நடத்தினோம். டிை ஆண்டிற்காக இம்மாதம் நாங்கள் அதிர்ச்சி அடையும் வகையில் நிர்வாக மான்யம் வழங்கப்பட்டது. அதைக் கணக்கிட்டுப் பார்த்ததில் சராசரி பள்ளி ஒன்றுக்கு $7\frac{1}{2}$ சதவிகிதம் தான் கொடுக்கப்பட்டுள்ளது. நிர்வாகிகள் பள்ளிக் கட்டிட வாடகையையும் இதர-பள்ளிச் செலவுகளையும் செய்தபிறகு கிடைக்கப்பட்ட மான்யத் தொகையைக்கண்டு ஏமாற்றமும் பெருமளவில் பண நட்டமும் அடைந்துள்ளமையால், மேற்கொண்டு தொடர்ந்து பள்ளி நடத்த இயலாத அவதிக்குள்ளாகியுள்ளோம்.

இந்நிலை மாறவேண்டுமானால், தொடர்ந்து அரசாங்கத்துடன் ஒத்துழைக்க வேண்டுமானால் பள்ளி கட்டிட வாடகையைக் கொடுத்து விட்டு நிர்வாக செலவுகளுக்காக 10 சதவிகிதத்திற்குக் குறைவு படாமலும், சொந்தக் கட்டிடமுள்ள பள்ளிகளுக்குக் கட்டிடாரிப்பேர் வரி முதலியவைகளுக்காக நிர்வாக மான்யம் 20 சதவிகிதம் அளிக்க அரசாங்கம் முன்வரவேண்டும்.

கட்டிட வாடகை தனியாகக் கொடுக்கவேண்டியது மிக மிக அவசியம் என்பதைப் பின் குறிப்பிட்டுள்ளவாறு விளக்கிக் காட்ட விரும்புகின்றோம். 5 வகுப்புக்கள் உள்ள ஆரம்பப் பள்ளியின்

1.	கட்டிட வாடகை (5 அறைகள் 1 அலுவலக அறை உட்பட) மாதம் 1-க்கு	ரூ.	80—00
2.	Conductor	ரூ.	15—00
3.	Sweeper	ரூ.	5—00
4.	Contingencies	ரூ.	15—00
5.	Scavenger	ரூ.	5—00
6.	ஆசிரியர்களுக்கு P. F. கட்டணம், நிர்வாகிகள் பங்கு	ரூ.	10—00
	ஆக மாதச் செலவு	ரூ.	130—00

ஐந்து வகுப்பு ஆசிரியர்களின் அடிப்படை மாதச் சம்பளம் ரூ. 350 ஆகின்றது. இதில் 10 சதவிகிதம் என்றால் ரூ. 35, 15 சதவிகிதம் என்றால் ரூ. $52\frac{1}{2}$, 20 சதவிகிதம் என்றால் ரூ. 70. நிர்வாக மான்யம் 20 சதவிகிதத்திற்குக் குறைவுபடாமல் கொடுத்தாலே கட்டிட வாடகைக்கு ஈடு செய்யமுடியவில்லை. ஆனால் தவிர்க்க முடியாத மற்ற செலவுகளும் இருக்கின்றன என்பதை நல்லுள்ளம் படைத்த எவரும் மறுக்க முடியாது. ஆதலால் கட்டிட வாடகையைத் தனியாகக் கொடுத்துவிட்டு நிர்வாகச் செலவிற்காக 10 சதவிகிதம் கொடுக்க வேண்டுமென்பது நியாயமான கோரிக்கை என்பதை இதைவிட அதிகமாக விளக்கிக் காட்டமுடியாது.

பிறகு, தனியார் நிர்வகித்துவரும் பள்ளிகளினால் அரசாங்கத்தால் ஆரம்பக் கல்விக்காகச் செலவிடப்படும் தொகையானது, சென்னை நகராண்மைக்கழகத்தார் ஆரம்பப் பள்ளிகளுக்காகச் செலவு செய்வதைவிட, பெருமளவிற்குக் குறைவாக இருப்பது கீழ்க்கண்ட புள்ளி விவரங்களினால் தெரியவருகின்றது.

	பள்ளிகளின் எண்ணிக்கை	ஆசிரியர்களின் எண்ணிக்கை
நகராண்மைக் கழகம்	278	3400
தனியார் பள்ளி	224	2000

நிர்வாகச் செலவு
ரூ. 5,14,550

தனியார் பள்ளிக்குச் சர்க்கார்
அளிக்கும் மானியம் ரூ. 1,50,000

மொத்த பிள்ளைகள்	ஆசிரியர்களின் சம்பளம் & அலவன்ஸ்
105,246	ரூ. 32,70,576
69,258	ரூ. 20,00,000

கட்டிட வாடகையும்
கட்டிட ரிப்பேர் செலவும்
5,89,575
இல்லை

சம்பள அடிப்படையில் சராசரியாக $7\frac{1}{2}$ சதவிகிதப்படி கணக்குப் பார்த்தால் தனியார் பள்ளி நிர்வாகத்திற்காக அரசாங்கம் இப்பொழுது மான்யமாகக் கொடுத்துள்ளது $1\frac{1}{2}$ லட்சமாகும். ஆனல் நகராண்மைக் கழகத்தாரால் வாடகைக்காகவும் கட்டிட ரிப்பேருக்காகவும், சுமார் 6 லட்சமும், நிர்வாகச் செலவிற்காக சுமார் 5 லட்சமும், செலவிடப்பட்டிருக்கிறது. தனியார்நடத்தும் ஆரம்பப் பள்ளிகளுக்கு கட்டிடவாடகையும் குறைவுபடாத 10 சதவீத நிர்வாகமானியமும் கொடுப்பதனல் சுமார் 3 லட்சம்தான் தேவைப்படுகிறது. எனவே நாங்கள் ஆண்டு ஒன்றுக்கு அதிகப்படியாகக் கேட்பது $1\frac{1}{2}$ லட்சமாகும்.

மற்றும் நகராண்மைப் பள்ளிகளில் படிக்கும் ஒரு பிள்ளைக்கு சராசரி ரூபாய் 45 செலவிடப்படுகின்றது. ஆனல் தனியார் நடத்தும் பள்ளிகளில் சராசரி ஒரு பிள்ளைக்கு ரூ. 30 தான் செலவிடப்படுகிறது. நாங்கள் அதிகப்படி கேட்கும் ரூபாய் $1\frac{1}{2}$ லட்சத்தையும் சேர்த்துக் கணக்கிட்டாலும் சராசரி ஒரு பிள்ளைக்கு ரூ. 33 தான் செலவாகும். இதனல் தனியார் நடத்தும் பள்ளிகளினல் அரசாங்கத்

தாருக்குச் செலவு நிச்சயமாகக் குறைவாக இருக்கின்றது என்பது தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது. அதுவுமின்றி தனியார் நடத்தும் பள்ளிகளில் நிர்வாகமும் கல்வித் திறனும் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றது என்பது அரசியலாரும் அதிகாரிகளும் பிரதிநிதிகளாகிய நீங்களும் ஒப்புக்கொண்ட உண்மையாகும்.

எனவே எங்களின் நியாயமான கோரிக்கைகளாவன :—

அ. தனியார் நடத்தும் மான்ய உதவி பெறும் எல்லாப் பள்ளிகளுக்கும் கட்டிட வாடகை முழுவதும் தமிழ் நாட்டு அரசாங்கம் கொடுக்க முன் வரவேண்டும்.

ஆ. நிர்வாகச் செலவுக்கான மான்யத் தொகை ஆசிரியர்களின் அடிப்படை சம்பளத் தொகையில் 10 சதவிகிதத்திற்கு எந்தவிதமான வெட்டுமின்றி (Flat Rate of Maintenance Grant of 10%) கொடுக்க வேண்டும். இவ்விரு கோரிக்கைகளையும் தமிழ் நாட்டுச் சட்டசபையில் பிரதிநிதிகளாகிய நீங்கள் சட்ட மன்றத்தில் எடுத்துக்கூறி, எங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றி வைக்கவேண்டுமெனச் சென்னை மாவட்ட நிர்வாகிகள் சங்கத்தின் சார்பில் வேண்டிக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

ஏ. ஆர். சேசாசலம்,
83, தையப்ப முதலி தெரு, சென்னை-1.
தலைவர்.

க. கணேசன்,
வி.ஏ. பாலகிருட்டினன்,
செயலாளர்கள்.

நிர்வாக உதவித் தொகை

—o:o—

உதவிபெறும் பள்ளி நிர்வாகிகளுக்கு ஒரு வேண்டுகோள்

இவ் வருடம் நிர்வாகக் கிராண்டு, ஜனவரி 60ல் இருந்து மே 1960 வரையில், ஆசிரியர்களின் சம்பளத் தொகையின் பேரில் (Assessed Grant, Teachers Salary without allowance) 5 மாதங்களுக்குக் கணக்கிட்டு 15 சதவீதமும் (15%), 1960 ஜூன் முதல் 1960 டிசம்பர் வரையில் 7 மாதங்களுக்கு (Assessed Grant, Teachers Salary without allowance) கணக்கிட்டு 10 சதவீதமும் நிர்வாகக் கிராண்டாக கொடுக்கும்படி அரசாங்கம் உத்தரவிட்டதாகத் தெரிகிறது.

ஆனால் கல்வி அதிகாரிகளில் சிலர் மட்டுமே அரசாங்க உத்திரவின்படி கணக்கிட்டுக் கொடுத்ததாகவும், பல கல்வி அதிகாரிகள் நிர்வாகிகளைக் கணக்குக்கேட்டுத் தங்கள் அபிப்பிராயப்படி 5 சதவீதம் முதல் 10 சதவீதம் வரையில் கணக்கிட்டு மிகக் குறைவாகக்

கொடுத்ததாகத் தெரிகிறது. அரசாங்க உத்தரவுப்படியாவது சம்பளம் வாங்காத பாடசாலைகளுக்கு (Non fee levying schools) குறைக்காமல் 15, 10 சதவீதம் கொடுத்திருந்தால் ஒருவாறு பாடசாலை நிர்வாகிகளுக்கு உதவியாய் இருக்கும். சில கல்வி அதிகாரிகள் நிர்வாகக் கிராண்டைக் குறைத்தது மிகவும் வருந்தத் தக்க காரியம்.

இதைப் பற்றித் தெளிவாக (Memorandum) அறிக்கை தயாரித்து சென்னைக்கு வந்துள்ள சட்டசபை அங்கத்தினர்களுக்குத் தமிழில் அச்சடித்துக் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கையின் நகல் ஒன்று நமது பத்திரிகையில் பிரசுரத்துள்ளோம். இதன்படி ஒவ்வொரு மாவட்ட ஆரம்பப் பள்ளி நிர்வாகிகள் சங்கம் கூட்டங்கள் கூட்டி அறிக்கைகள் தயார் செய்து கல்விமந்திரிக்கும் கல்வி இலாகா டைரக்டருக்கும் அனுப்பும்படி கேட்டுக் கொள்ளுகிறேன். அந்தந்த மாவட்டத்திலுள்ள ஜில்லா கல்வி அதிகாரிகள், டிப்டி இன்ஸ்பெக்டர்கள் இவர்களை நேரில் கண்டு விவாதித்து அறிக்கையைக் கொடுக்கவும்.

தற்போது வரும் ஏப்ரல் மாதத்தில் சென்னை, தஞ்சை, திருச்சி முதலிய இடங்களில் ஆரம்பப் பள்ளி நிர்வாகிகள் மாநாடு நடத்த ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கின்றன. இம்மாதிரி மாநாடுகள் ஜில்லாவாரியாக நடத்தவேண்டியது மிக மிக அவசியம்.

மாநாடுகள் கூட்டிக் கிளர்ச்சி செய்தால் அல்லாது எய்டட் பாடசாலைகளின் நிர்வாகம் சரி வர நடத்த இயலாது. நமது தமிழ் நாட்டில் தேர்தல் 1962ல் நடக்க இருக்கிறது. இப்போது எல்லாக் கட்சிக்காரர்களும் நமது மாநாட்டிற்கு அழைக்கப்பட்டால் எல்லோரும் வருவார்கள். அவர்களுக்கு நம்முடைய குறைகளை எடுத்துக்கூறி ஆவன செய்யும்படி வற்புறுத்த வேண்டும். மாவட்ட ரீதியாக மாநாடுகளைக் கூட்டும்படி மாவட்ட ஆரம்பப் பள்ளி நிர்வாகிகள் சங்கக் காரியதரிசிகளைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

P. வீரராகவன்,
தலைவர்,
தமிழ் நாடு ஆரம்பப் பள்ளி நிர்வாகிகள் சங்கம்,
ஆரம்பக் கல்வி நிலையம்,
94/95, புதுத் தெருவு, சென்னை-1.

கஷ்டமின்றி இட்லி தயாரிக்கும் முறை

வி. பாலு

சூடான, மெதுவான இட்லியை நினைத்தாலே நாக்கில் ஜலம் ஊறுகிறது. கடல்பஞ்சு போன்று மெத்தென்று இருக்கும் இந்த இட்லியோடு சட்டினியோ, சாம்பாரோ இணை சேர்ந்துவிட்டால், அதன் ருசியையும் மணத்தையும் இன்னதுதான் என்று வர்ணித்துக் கட்டுமா?

இட்லி சத்தான ஓர் உணவு. காரம், புளிப்பு என்றுள்ள எந்த ருசியிலும் சேராமல், தனித்தோர் அலாதியான ருசி படைத்த இந்த உணவை நாக்கு ருசிக்காகச் சாப்பிடுகிறவர்களும் உண்டு; வயிற்றின் கனல் வாதையைத் தணிக்க உண்பவர்களும் உண்டு.

வானப்பரப்பில் தலைமறைவாய் இருக்கும் நக்ஷத்திரம் ஒன்றைக் கண்டுபிடிப்பதை விட, புதிய உணவுப் பண்டம் ஒன்றைக் கண்டுபிடித்து வெளியிடுவது மக்கள் இனத்தின் மகிழ்ச்சியை அதிகப்படுத்துவதாகும் என்று பிரில்லட்-சவாரின் என்னும் அறிஞர் எழுதுகிறார். வாஸ்தவம்தான். அத்தகைய மகிழ்ச்சி தரும் காரியம் ஒன்றைத் தான் யாரோ ஒரு மேதை, பெயர் தெரியாத தென்னிந்திய மேதை இட்லியைக் கண்டுபிடித்ததன் மூலம் செய்திருக்கிறார். உளுந்தையும் அரிசியையும் ஊறப் போட்டு, அரைத்துப் புளிக்க வைத்த பின்னர் நீராவியில் வெந்து உணவுப் பண்டமாகும் இட்லியும் சரி, அதைப் போன்ற தோசை முதலியனவும் சரி, கோதுமையிலிருந்து தயாராகும் ரொட்டிக்குச் சம அந்தஸ்து வகிக்கின்றன.

என்றோ முதல் முதலாக வந்தது இந்த இட்லி. அதற்குப் பின் எத்தனையோ வகையான உணவுப் பண்டங்கள் மனிதப் பழக்கத்துக்கு வந்தன. எனினும் இட்லி அன்று தான் பிடித்துக் கொண்ட ஆட்சிப் பீடத்தை விட்டு இறங்கிவிடவில்லை. இன்றைக்கும் இது காலை ஆகாரத் திட்டத்தில் முக்கிய ஸ்தானம் வகிக்கிறது. அதிலும் தென்னாட்டு மக்களுக்கு இட்லி என்றால் உயிர் தான். தென்னகத்துத் தொன்மையான நாகரிகத்தோடு ஒன்றிப்போன ஓர் அம்சம் என்றே இதனைச்சொல்லி விடலாம்.

இட்லியின் பெருமை, சிறப்பு திசை யெல்லாம் பரவி, இந்திய நாட்டின் பற்பல பாகங்களில் மட்டும் அல்லாமல், இதர தேசங் களிலும் அதன் ஆட்சி இன் றைக்கு நின்று நிலவி நடைபெறு கின்றது. இதிலிருந்து என்ன தெரிகிறது? நாவுக்கும் வயிற்றுக் கும் இதமான உணவுப் பொரு ளுக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பான வரவேற்பு நிச்சயமாக உண்டு என்பது தான்!

இட்லி என்றவுடன் மெத் தென்று இருக்கும் அதன் மிரு துத் தன்மையே ஞாபகத்துக்கு வருகிறது. அப்படி மிருதுவாக இருப்பதால்தான் இட்லி சுலப மாகச் சீரணமாகிறது. எனவே இரண்டு வயது குழந்தைக்குக் கூட இதை உணவாகக் கொடுக்கி றார்கள். உட்புறம் புரையோடிய இட்லியை ஜீரணக் கருவிகள் எளிதில் ஏற்றுக்கொண்டு தங் கள் காரியத்தைச் சுலபமாகச் செய்கின்றன! இட்லிக்கு இன் னும் சில விசேஷ தன்மைகளும் உண்டு. மைசூரில்உள்ள மத்திய உணவு ஆராய்ச்சிக் கழகத்தார் கள் நடத்திய சோதனைகள் **இரத்தத்தில் உள்ள சர்க்கரை யின்அளவை இட்லி குறைக்க வல்லது என்றும்,** எனவே நீரி ழிவு வியாதிக்காரர்களுக்கு இந்த இட்லி நல்ல ஆகாரம் என்றும் தெரிவிக்கின்றன.

இட்லி தயாரிக்கும் முறையை விஞ்ஞான ரீதியில் வைத்துச் சோதனைகள் நடத்தப்பட்டன. தேனடைபோன்றும் கடல் பஞ்சு போன்றும் உள்ளே புரைசல்கள் இருப்பதால் இட்லி மிருதுவாக இருக்கிறது என்றும், இட்லி மாவு புளிக்கும்போது உண்டா கும் கரியமில வாயு தான் இந்தப் புரைசல் அமைப்புக்குக் காரணம் என்றும் கண்டுபிடித்திருக்கிறார் கள். கரியமில வாயு உள்ளே குமிழ் குமிழாகத் தங்கியிருப்ப தால்தான் அரைத்து வைத்த இட்லி மாவு நுரைத்துக்கொண்டு விம்மிப் பொங்குகிறது! உளுந் தின் மேல்பரப்பில் உள்ள ஜீவ அணுக்கள் மாவு புளிப்பதற்கு முக்கிய காரணமாகிச் சகாயம் புரிகின்றன!

இட்லி தயாரிக்கத் தொன்று தொட்டு வழக்கத்தில் உள்ள சாதாரண முறை இது தான்: தண்ணீரில் ஊறப்போட்ட புழுங் கல் அரிசியையும் உளுந்தையும் தனித் தனியே குடை கல்லில் போட்டு ஆட்டி, மாவாக்கி, நன் றாய்க் கலந்து, அத்தோடு வேண் டிய அளவுக்கு உப்பைச்சேர்த்து அதனை அப்படியே ஓர் இரவு பூராவும் வைத்துவிட வேண்டி யது. உளுந்தை நன்றாக ஆட்டிக் குடைந்தால் தான் மாவு நுரைத் துக்கொண்டு மேல் எழும்பிப் பொங்கும். இவ்வாறு அரிசியை யும் உளுந்தையும் குடை கல்லில் போட்டு ஆட்டிக் குடைந்து மாவாக்குவது கஷ்டமான காரி யம். அதிலும் நிறைய அரைக்க வேண்டி ஏற்பட்டால் கஷ்டம் இன்னும் அதிகம்தான். சில உணவு விடுதிகளில் மாவு அரைக் கும் வேலையை இயந்திரங்கள்

செய்கின்றன. எனினும் அதிலே சிக்கனம் இல்லை. ஆட்டுக்கல்லை விட இந்த இயந்திரங்கள் அதிக மான பணத்தை விழுங்கிவிடு கின்றன; எனவே அரைக்கிற வேலையே இல்லாமல் கலவை முறையிலே இட்லி தயாரிக்க முடிந்தால், வீட்டில் இட்லி தயாரிக்கவும் ஹோட்டல்காரர்க ளுக்கும் சௌகரியமாக இருக்கு மே என்கிற எண்ணம் உதித்தது. அதன் பலனாக மைசூர் மத்திய உணவு ஆராய்ச்சிக் கழகத்தில் ஆராய்ச்சிகள் தொடங்கின.

புழுங்கல் அரிசி மாவையும் உளுத்தம் மாவையும் கலந்து தண்ணீரில் ஊறப் போட்டு, புளிக்கவைத்தால், இட்லி மாவு தயாராகிவிடுகிறது. எனினும் அரிசியையும் உளுந்தையும் ஒன் ருகப் போட்டு ஊற வைப்பத ஞல் மாவு புளிக்க அதிக நேரம் பிடிக்கிறது. அத்தோடு வேண் டாத வாசனையும் உண்டாகிறது. அப்படி இல்லாமல், உளுத்தம் மாவை மட்டும் 6 முதல் 8 மணி அவகாசம் தண்ணீரில் ஊற வைத்துப் பின்னர் அத்துடன் அரிசி மாவைக் கலந்தோமாஞல், வேண்டாத வாசனை இருப்ப தில்லை. இட்லி மாவும் நுரைத் துக் கொண்டு விம்மிப் புடைத்து ஜோராகப் பொங்கிப் பக்குவ மாகி விடுகிறது!

இந்த முறையில் எத்தனையோ வசதிகள். அரிசியையும், உளுந் தையும் அப்படியே மாவாக அரைப்பது சுலபம். உளுந்தை மைதா போலவும், கோதுமை மாவுபோலவும் நன்ருக அரைக்க வேண்டும். (அரைத்த உளுத்தம் மாவு 100 மெஷ்* சல்லடை வழி யாகக் கீழே இறங்கவேண்டும்.) புழுங்கல் அரிசியைப் பொடியாக இல்லாமல் பெரியதாகவும் இல் லாமல் மத்தியமாக இருக் கும் ரவையைப்போல் அரைத் துக்கொள்ளவேண்டும். (அரிசி மாவு 25 மெஷ்* சல்லடை வழி யாகச் செல்லும்படி இருக்க வேண்டும்.) இந்த அளவுக்குக் குறைந்து பொடியாகப் போன மாவை அவசியம் நீக்கிவிட வேண்டும். அவ்வாறு நீக்கப் பட்ட பொடி மாவைத் தோசை போன்ற உணவுப் பதார்த்தங்கள் தயாரிக்கப் பயன்படுத்தலாம்.

மேலேகுறித்த வண்ணம் அரிசி மாவும் உளுத்த மாவும் கையில் தயாரானவுடன் இட்லி தயாரிப் பது வெகு எளிதான காரியம். ஒரு படி உளுத்தம் மாவை ஒன்ற ரைப் படி தண்ணீரில் போட்டு, கலக்கி அப்படியே ஆறிலிருந்து எட்டு மணி அவகாசம் வைத் திருக்கவேண்டும். அதன் பிறகு ஒன்றரைப்படி அரிசி மாவை எடுத்துச் சம அளவு ஜலத்தில் கலக்கி, தேவையான உப்பையும் போட்டு, உளுத்தம் மாவோடு ஒன்ருய்க் கலந்து இன்னும் 12 மணி நேரம் அப்படியே வைத் துப் புளிக்கப் பண்ணவேண்டும். இவ்வாறு தயாரான இட்லி மாவை நீராவியின் உதவி கொண்டு வழக்கமான முறையில் இட்லியாக வார்த்துவிட வேண் டும்.

மைசூர் மத்திய உணவு ஆராய்ச்சிக் கழகத்தில் மேலும் மேலும் ஆராய்ச்சிகள் தொடர்ந்து நடந்தன. அதன் பலனாக இட்லி கலவைப் பொடி தயாராயிற்று. இந்தக் கலவை அரிசி மாவு, உளுத்தம் மாவு இவற்றோடு ரொட்டிக் கிடங்கில் உபயோகிக்கும் காடியைக் கலந்து தயாரிக்கப்படுகிறது. இதிலே ஒருபெரிய சௌகரியம்: இத்தகைய கலவையில் புளிக்க வைக்கும் வஸ்துக்கள் உள்பட தேவையான எல்லாப் பொருள்களும் சேர்ந்துள்ளன. ஆகையினால் இட்லி தயாரிப்பது வெகு சுலபம். கலவையை முதல்நாள் தண்ணீரில் ஊறப்போட்டு, மறு நாள் காலை இட்லியாக வேகவைத்து எடுத்து விடலாம். இந்த இட்லிக் கலவைக்கு மார்க்கெட்டில் நல்ல கிராக்கி இருக்கிறது. இதை உணர்ந்து, தென்னிந்தியாவில் இதன் உற்பத்தியில் சில வியாபாரிகள் ஏற்கெனவே ஈடுபட்டிருக்கிறார்கள்.

"வேலை அறிந்து வேலை செய்தால் விரல் மடக்க நேரம்இல்லை" என்பது பெண் மக்கள் தங்களுக்குள் சொல்லிக் கொள்ளும் ஒரு வசனம். நியாயம். குடித்தனப் பெண்ணுக்கு வீட்டிலே எத்தனையோ வேலை. அடுப்பங்கரையே அவளது நேரத்தை விழுங்கிவிடும். செய்கிற அலுவல்களும் கடுமையாகவே இருக்கும். இந்த நிலைமைக்கு என்ன காரணம்? காரணம் இது தான். அவளுக்குத் தன் வேலையை விரைவாகவும் சுளுவாகவும் செய்யும் மார்க்கம் தெரியவில்லை. மைசூர் மத்திய உணவு ஆராய்ச்சிக் கழகத்தார்கள் குடித்தனப் பெண்ணுக்கு இவ் விஷயத்தில் சகாயம்புரிய முன்வந்திருக்கிறார்கள். எத்தனையோ அலுவல்களுக்கிடையில் இட்லியைச் சுலபமாகத் தயாரிக்கும் முறையைக் கண்டுபிடித்து அறிவித்திருக்கிறார்கள். அரைக்காமல், கரைக்காமல், இடிப்பொடிய உழைக்காமல் இனிமேல் குடித்தனப் பெண்கள் இட்லியைச் சுலபமாகத் தயாரித்து, சுமுகமாகப் பரிமாறலாம்.

---

*மெஷ்—சல்லடையில் ஒரு சதுர அங்குலம் பரப்பில் உள்ள துவாரத்தைக் குறிப்பது.

★ ★ ★

****

இரைச்சலால் விளையும் இன்னல்

****

இரைச்சலும் சப்தமும் இரத்த ஓட்டத்தைக் குறைத்து உடல் நலத்தைப் பாதிக்கின்றன. ஆகையால், அவற்றைக் கட்டுப்படுத்த ஒவ்வொரு நகரிலும் ஒரு கமிஷனரை நியமிக்கலாம் என்கிறார் புகழ் பெற்ற ஜெர்மன் மருத்துவப் பேராசிரியர் ஒருவர்!

வைத்தியத் துறைப் பேராசிரியர் பிரசித்தி பெற்ற கந்தர் லேமேன், டார்ட்மண்டிலுள்ள மாக்ஸ் பிளாங்க் கழகத்தின் தலைவர். இரைச்சலைக் குறைப்பதற்கான சர்வதேச சங்கத்துக்கும் அவர்தான் தலைவர். மனித வாழ்க்கையில் இயந்திரங்களின் ஆதிக்கம் அதிகமாகிவிட்டதால் இக்காலத்தில் இரைச்சலும் சத்தமும் ஒரேயடியாகப் பெருகிவிட்டன. இந்தத் தொல்லை பொறுக்காமல் இவற்றைக் குறைப்பதற்கு சர்வதேச ரீதியில் நடவடிக்கை எடுக்கவேண்டிய அவசியம் கூட ஏற்பட்டுவிட்டது. சத்தத்தைக் குறைப்பதற்கான முதலாவது சர்வதேச மாநாடு சமீபத்தில் ஸ்விட்ஸர்லாந்திலுள்ள ஜூரிச்சில் நடந்தது. பதின்மூன்று நாடுகள் அதில் கலந்துகொண்டன. இயந்திரங்களும் மற்றக் கருவிகளும் தான் பெரும்பாலும் சத்தம் உண்டாக்குகின்றன என்பது உண்மையே. ஆனாலும் இயந்திரத்தைவிட மனிதனைத்தான் அதிகம் குற்றம் சொல்ல வேண்டும். சரியானபடி பார்த்தால், மோட்டார் சைக்கிள் ஓட்டுகிறவர், தமது எஞ்சினை வேண்டுமென்றே ஓலமிட விடுகிறார். அடுத்த வீட்டுக்காரர் ரேடியோவை ஓவென்று அலற விடுகிறார். இந்நிலையில் மோட்டார் சைக்கிளையோ, ரேடியோவையோ எப்படிக் குற்றம் சொல்ல முடியும். இயந்திரங்களால் உண்டாகும் சத்தத்தைக் கூடக் கணிசமாகக் குறைப்பதற்கு பல வழிகள் இருக்கின்றன; அந்த வழிகளை மனிதன் கவனமாகப் பின்பற்றவேண்டும். அவ்வளவுதான். ஜூரிச் மாநாட்டில் அநேக யோசனைகள் வெளியிடப்பட்டன.

சப்த எதிர்ப்புச் சங்கத்தின் தலைவரான லேமேன் சத்தத்தை மூன்று வகைகளாகப் பிரிக்கிறார். முதல் வகைச் சத்தம் மனதைப் பாதிக்கக்கூடியது. இரண்டாவது வகைச் சத்தம் நரம்புகளை நேரடியாகப் பாதிக்கக் கூடியது. மூன்றாவது வகைச் சத்தம் செவிப் புலனையே பாதிக்கக் கூடியது.

முதல் வகை 65 போன்கள் வரை எட்டுகிறது. (போன் என்பது சத்தத்தின் அடிப்படை அளவு) வெளியிலுள்ள இயந்திரம் ஒன்றில் சத்தம், 40 போன்கள் வரை போனல்கூட மிகவும் நாராசமாயிருக்கும். இதைவிட மிதமான சத்தங்கள்கூட முதலில் மனதில் பரபரப்பைக் கொடுத்து, படிப்படியாக நரம்பையும் பாதிக்கக் கூடியவை. அதிலும் இரவு வேளையில் சத்தத்துக்கு அதிகத் தீவிரமான விளைவு இருக்கும்.

சத்தம் மனதைப் பாதிப்பது என்பது மனிதருக்கு மனிதர் வித்தியாசப்படுகிறது. பேராசிரியர் லேமேன் சித்தாந்தப்படி இது, ஒவ்வொருவருடைய மனமும் எவ்வளவு நாசுக்கானது என்பதைப் பொருத்த விஷயம். அவரவருடைய உணர்ச்சி இயல்பைப் பொருத்து அது மாறுபடுகிறது. நாம் போடும் சத்தமோ, நமக்குப் பிடித்த ஒரு காரியத்திலிருந்து விளையும் சத்தமோ அது எவ்வளவு உரக்க இருந்தாலும் நமக்குத் தொந்திரவாகப் படுவதில்லை. இளம் வயது பெற்றோருக்கு, தம் குழந்தைகள் போடும் சத்தம் பிடிக்கிறது. ஆனல் அதே சத்தம் அண்டை வீட்டுக்காரர்களுக்கு ஒரே ஆத்திரத்தைக் கொடுக்கிறது. மோட்டார் சைக்கிள் ஓட்டும் இளைஞனுக்கு அதன் எஞ்சினுடைய அலறல் இன்னிசையாகப்பட்டு ஆனந்தத்தைக் கொடுக்கிறது. அதுவே மற்ற எல்லோருக்கும் நாராசமாயிருக்கிறது. விசேஷ இயந்திரம் ஒன்று போடும் சத்தம் தொழிலாளிக்கு மிக்க பெருமையைக் கொடுக்கிறது. அந்தச் சத்தத்தைக் குறைப்பதற்கு ஆலை நிர்வாகி நடவடிக்கை எடுத்தால் தொழிலாளிக்கு அது பிடிப்பதில்லை. வேறு சிலர் இருக்கிறார்கள்: எவ்வளவுக்கெவ்வளவு அதிகச் சத்தம் போட முடிகிறதோ, அவ்வளவுக்கவ்வளவு நமக்கு வலிமையும் முக்கியத்துவமும் அதிகம் என்று நினைக்கிறார்கள்!

விழித்திருக்கும்போது 65 போன்கள், தூங்கும்போது 45 போன்கள் இதற்கு மேல் போனல்—நமக்கு அது பிடிக்கிறதோ இல்லையோ—நம் நரம்பு தானகவே பாதிக்கப்படுகிறது.

சிறு இரத்தக்குழாய்கள்-குறிப்பாகத் தோலில் உள்ள நல்ல இரத்தக் குழாய்கள் இந்த சத்தத்தால் குறுகிப்போகின்றன என்றும் மிக முக்கியமான விளைவு இதுதான் என்றும் பேராசிரியர் லேமேன் கண்டுபிடித்திருக்கிறார். இப்படி நல்ல இரத்தக் குழாய்கள் குறுகும்போது, இருதயத்திலிருந்து வெளிப்படும் இரத்தத்தின் அளவு குறைகிறது. சில சமயம் உடலின் மொத்த இரத்த ஓட்டம் இதனல் பாதியாகவும் குறைந்து விடுவதுண்டு. சத்தத்தின் அலை வேகத்துக்கும், இதற்கும் சம்பந்தம் கிடையாது. சத்தத்தின் விளைவு, இளைஞர்களைவிட முதிய

வர்களையே அதிகமாய்ப் பாதிக்கிறது. குழந்தைகள் இதை உணர்வதே இல்லை. சத்தம் இரத்த ஓட்டத்தைப் பாதிக்கும் போது அந்த சத்தம் நீடிக்கும் வரை அது மணிக்கணக்காக இருந்தாலும் பாதிப்பும் நீடிக்கிறது. சத்தம் ஓய்ந்தபின் இரத்த ஓட்டம் கொஞ்சம் கொஞ்சமாக மாமூல் நிலைக்கு வருகிறது. இதை எண்ணத்தால் கட்டுப்படுத்த முடியாது. பழக்கப்பட்டுப் போவதென்ற பேச்சும் இதில் இல்லை. மனதைப் பொறுத்த மட்டில். சில சத்தங்களுக்கு நாம் பழக்கப்பட்டு விடலாம். ஆனால் நாம் இரத்தக்குழாய்கள் ஒரு போதும் இதற்குப் பழக்கப்பட்டு சும்மா இருந்துவிடுவதில்லை.

கடும் சத்தம் கேட்டுக் கேட்டுப் பழக்கப்பட்டுப் போன உருக்காலைத் தொழிலாளர்களை டாக்டர் ஜான்சன் என்பவர் இப்போது தான் ஆராய்ந்து முடித்திருக்கிறார். அவர்களில் மிகவும் அதிகமான சத்தத்திற்கு உட்பட்டவர்களின் தோலில் இரத்த ஓட்டம் பாதிக்கப்பட்டிருப்பதும் இதயம் இயங்கும் விதத்தில் முறை கேடுகள் ஏற்பட்டிருப்பதும் ஜீரணத்திலும் நிதானத்திலும் கூடச் சிறிது அதிகமாகச் சிக்கல்கள் தோன்றியிருப்பதும் அவர் கண்டுபிடித்திருக்கிறார். சப்தம் நெடு நாளைக்கு நீடிக்குமேயானால் நரம்பு இரத்தக்குழாய்க் கோளாறு அதிகமாகி கடைசியில் டாக்டரிடம் சிகிச்சை கோர வேண்டிய நிலைமை ஏற்பட்டுவிடும். அதிகச் சத்தத்திற்கு இலக்கான தொழிலாளர்கள் பார்ப்பதற்கு நன்கு திடகாத்திரமாக எதையும் தாங்கிக்கொள்பவர்கள் மாதிரிதான் இருந்தார்கள். ஆனால் இவர்கள் குறைச்சல் சத்தத்திற்கு இலக்கானவர்களைக் காட்டிலும் அதிக அளவுக்கு குடும்பத்திலும், ஆலையிலும் அமைதியற்றிருந்தார்கள் என்பது ஆராய்ச்சி மூலம் தெரிந்தது.

சத்தத்தின் மேல் வரம்புகள்

இரண்டாவது வகைச் சத்தம் 65க்கு மேல் 90 போன்கள் போகிறது. 90 போன்களுக்கு மேல் போனால் செவிப்புலனையே சத்தம் கெடுத்துவிடும். இந்தக் கடும் சத்தத்தினால் ஏற்படும் செவிட்டுத் தனம் சிலமணி நேரத்திற்கப்புறம் தணிந்து விடுகின்றது. அபூர்வமாக இது சில நாட்கள் கூட நீடிக்கலாம். ஆயினும் அந்த மாதிரி சத்தம் நெடுங்காலத்துக்கும் காதை துளைத்துக் கொண்டே இருக்குமானால் காது நிரந்தரமாய் செவிடாகிவிடும். இந்த அம்சத்திலும் மனிதருக்கு மனிதர் இதன் தீவிரம் வேறுபடுகிறது. வேலையில் 90 போன்களுக்கு மேல் சத்தம் கேட்கக் கூடாதுஎன்று ஜெர்மனிஎன்ஜினியர்கள்சங்கம் கருத்து வெளியிட்டிருக்கிறது. தொழிற்சாலைச் சப்தம் சில தீவிர சந்தர்ப்பங்களில் 120 போன்களை எட்டிவிடக் கூடும். இதற்கும்மேல் 150 போன் அளவுக்கு சத்தம் ஏற்படுவதெல்லாம் ரொம்ப அபூர்வம் தான். ஜெட், ராக்கெட் கருவி

களைச் சோதனை செய்யும்போது இந்த அளவுக்குச் சத்தம் தீவிரமாகலாம். இந்த மாதிரிச் சத்தம் மத்திய நரம்பு அமைப்பு முழுவதற்குமே ஆபத்தானது. தாங்க முடியாத எல்லைக்கு ஒலி அலைகள் உண்டாகி பக்கவாதமும் மரணமும் கூட இதனல் சம்பவிக்கலாம்.

சத்தத்தைக் கட்டுப்படுத்துவதற்குச் சட்டம் இயற்றவேண்டும் என்றும் இது விஷயத்தில் முழு அதிகாரம் போலீசாருக்குத் தரவேண்டும் என்றும் ஜூரிச் பல்கலைக் கழக சட்ட நிபுணர் பேராசிரியர் கார்ல் ஆப்டிங்கர் வற்புறுத்துகிறார். சத்தத்தின் மீதான போலீஸ் கட்டுத்திட்டங்கள் மட்டும் சரியானபடி நிறைவேறிவிட்டால் அதுவே போதுமென்பது அவருடைய கருத்து. சத்தத்தை சட்டபூர்வமாகவும், நிர்வாக ரீதியிலும் கட்டுப் படுத்துவதற்கு என்னென்ன செய்ய வேண்டுமென்பதை விரிவாக விளக்கப்பேராசிரியர் ஆப்டிங்கர் ஒரு திட்டம் தயாரித்துக் கொடுத்திருக்கிறார். பெருவாரி மக்கள் வாழும் காலனி ஒவ்வொன்றுக்கும் சத்த கட்டுப்பாட்டுக் கமிஷனர் ஒருவர் இருக்கவேண்டுமென்று அவர் யோசனை சொல்லுகிறார்.

நாகரிக உலகம் முழுவதிலும் சத்தம் என்னும் தொல்லையை ஒழித்துவிடக்கூடிய சரியான திட்டம்தான் இது. ஆனல், சத்தம் குறைந்தால் வருமானம் இழப்பவர்களும் வேறு அசௌகரியங்களுக்கு இலக்காகக் கூடியவர்களும் நிறையப்பேர் இருக்கிறார்கள். சத்தத்துக்கு மேல்வரம்பு விதிக்கப்படுவதை எல்லா இடங்களிலும் அவர்கள் நிச்சயம் எதிர்ப்பார்கள் என்றும் அதே பேராசிரியர் வருத்தத்துடன் ஒப்புக்கொள்கிறார்.

"நவஇந்தியா"

இந்திய அரசின் புதிய வரிகள்

அண்மையில் லோக் சபையில் நிதிமந்திரி மொரார்ஜி தேசாய் இந்த வருட பட்ஜெட்டில் துண்டு விழும் தொகையை ஓரளவு ஈடு கட்ட கீழ்க்கண்ட வரி பிரேரணைகளைச் சமர்ப்பித்தார்:-

(1) பாக்குக்கு எதிர் வரி கிலோ கிராமுக்கு 80 நயேபைசா அதிகரிக்கும் இதனல் ரூ. 57 லட்சம் கிடைக்கும்.

(2) 41 பண்டங்களின் மீது சுங்கத் தீர்வை அதிகரிக்கப்படும். இதனல் ரூ. 16 கோடி 95 லட்சம் கிடைக்கும்.

(3) இரும்பு, எஃகு மீது தீர்வை விலை விகிதத்தில் 35 சதவீதத்திலிருந்து 50 சத வீதமாகும். இதனல் ரூ. 1 கோடி கிடைக்கும்.

(4) சாராயம், காடிகள் இவற்றின்மீது தீர்வை அதிகரிப்பதன் மூலம் ரூ. 24 லட்சம் கிடைக்கும்.

(5) பத்திரிகைக் காகிதத்தின் மீது தீர்வை விலை மதிப்பின் பேரில் 10 சத வீதமாக உயரும். இதனால் ரூ. 38 லட்சம் கிடைக்கும்.

(6) ஆதார இயந்திரங்கள், உதிரி பாகங்கள்மீது இறக்குமதித் தீர்வை 10 சத வீதத்திலிருந்து 15 சத வீதமாகும். சர்வ தேச வாணிப, காப்பி வரி ஒப்பந்தத்தில் சம்பந்தப்பட்ட பண்டங்களுக்கு இது பொருந்தாது.

(7) காப்பிமீது சுமார் 36 சத வீதம் தீர்வை அதிகரிக்கும். இதன்மூலம் ரூ. 38 லட்சம் கிடைக்கும்.

(8) உதிரி தேயிலேமீது எதிர் வரி அதிகரிக்கப்படும்.

(9) உயர்ந்தரக மண்ணெண்ணெய்மீது தீர்வை 46 சதவீதம் அதிகரிக்கும்.

(10) தேயிலைமீது ஏற்றுமதி தீர்வை 9 நயா பைசா குறையும். இதன்மூலம் ரூ. 2 கோடி வருமானம் குறையும்.'

(11) சில இயந்திரங்களுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள சலுகை 5 சத வீதத்திலிருந்து 10 சத வீதமாக உயர்த்தப்படும்.

டீஸல் எண்ணெய்மீது மெட்ரிக் டன்னுக்கு ரூ. 28.15 சத வீதம் அதிகரிப்பால் 133 லட்சம் ரூபாய் கிடைக்கும்.

அச்சுக் காகிதம், எழுதும் காகிதம் இவற்றின்மீது தீர்வை அதிகரிக்காது.

எதிர் வரி மாறுதலால் இறக்குமதிப் பண்டங்களின்மீது வரி அதிகரிப்பால் ரூ. 12.32 லட்சம் கிடைக்கும்.

பெயிண்டுகள், வார்னிஷ்கள் மீது தீர்வை 25 சத வீதம் அதிகரிக்கும். இதன்மூலம் ரூ. 30 லட்சம் கிடைக்கும். காகிதம், அட்டைகள்மீது 36 சத வீதம் அதிகரிக்கும். இதனால் 2 கோடியே 37 லட்சம் ரூபாய் கிடைக்கும்.

1000 குச்சிகளுக்கு அதிகப்படி தீர்வை 57 பைசாவிலிருந்து 65 நயா பைசாவாக அதிகரிக்கும்.

50 குச்சிகள் கொண்ட சாமானியப் பெட்டிகள் இதனால் அநேகமாகப்பாதிக்கப்படா. அசாதாரண அளவில் தொகை உள்ள பெட்டிகள் தான் பாதிக்கப்படும்.

கண்ணாடி, கண்ணாடிப் பண்டங்கள், பீங்கான் இவற்றிற்கு விலை அடிப்படையில் 5 சத வீதத்திலிருந்து 15 சத வீதமாக்கப்படும். இதனால் ரூ. 1 கோடி 60 லட்சம் கிடைக்கும்.

நடுத்தர ரக காடா பருத்தி மீது அடிப்படைத் தீர்வை 25 சத வீதம் அதிகரிக்கும்.

பக்குவப்படுத்தப்பட்ட துணி மீதும் தீர்வையில் சிறு உயர்வு உண்டு. இதனால் ரூ. 4 கோடியே 72 லட்சம் கிடைக்கும்.

ரேயான், நார்ப்பட்டு நூல்மீது இப்போதைப்போல் இன்னும் 3-ல் இரண்டு பகுதி உயரும்.

ரேடியோ செட்கள், குளு குளு சாதன இயந்திரங்கள் இவற்றின்மீது விலை அடிப்படையில் 20 சதவீதம் அதிக தீர்வை. இதனால் ரூ. 83 லட்சம் கிடைக்கும்.

தாமிரம், துத்தநாகம் இவற்றின் தகடுகள் விலை மதிப்புமீது மெட்ரிக் டன்னுக்கு ரூ. 300ம், குழாய்களுக்கு 10 சத வீதமும் தீர்வை. அலுமினியத்துக்கும் இப்படியே. இதன்மூலம் ரூ. 80 லட்சம் கிடைக்கும்.

எல்லா வரிகள் தீர்வைகளிலும் சேர்ந்து ரூ. 60 கோடியே 87 லட்சம் அதிகமாக எதிர்பார்க்கப்படுகிறது.

இந்திய கம்பெனியாயினும் அந்நிய கம்பெனியாயினும் அவற்றில் பெரும்பாலான பங்குகளாயினும் சரி சிறுபான்மை பங்குகளாயினும் சரி கம்பெனிகள் தமக்குள் செய்து கொள்ளும் முதலீடுகள் பேரில் வழங்கப்படும் டிவிடெண்டுமீது சூப்பர் வரி 20 சத விகிதமாக இருக்கும். இப்புதிய விகிதம் இவ்வருடம் ஏப்ரலுக்குப் பிறகு அமைக்கப்படும் கம்பெனிகளுக்கு மட்டுமே பொருந்தும்.

புதிய போனஸ் பங்குமீதான வரி 30 சதவிகிதத்திலிருந்து $12\frac{1}{2}$ சத விகிதத்துக்குக் குறைக்கப்படும்.

லட்ச ரூபாய்க்கு மேற்பட்டு சம்பாதிக்கப்படும் நபர் வருமானத்தின் மீதான விசேஷ சர்சார்ஜ் அசல் வரி அடிப்படையில் 5 சத விகிதத்திலிருந்து 10 சத விகிதத்துக்கு உயர்த்தப்படுகிறது.

மக்கள் தொகை – சில விவரகள்

மலையாளிகளின் மக்கள் தொகைப் பெருக்கம் தமிழர்களின் மக்கள் தொகைப் பெருக்கத்தை விட இரண்டு மடங்கு வேகத்துடன் இருக்கிறது!

தெலுங்கர், கன்னடர் ஆகியவர்களின் மக்கள் தொகைப் பெருக்கம் கூட தமிழர்களின் மக்கள் தொகைப் பெருக்கத்தை விட வேகமாகத்தான் இருக்கிறது!!

சென்னை ராஜ்யத்தின் மக்கள் தொகை கடந்த 10 ஆண்டுகளில் ஆயிரத்திற்கு 117 பேர்கள் வீதம்தான் பெருகி இருக்கிறது!

ஆனால், மலையாள (கேரள) ராஜ்ஜியத்தின் மக்கள் தொகை கடந்த 10 ஆண்டுகளில் ஆயிரத்திற்கு 246 பேர்கள் வீதம் பெருகி இருக்கிறது!

மைசூர் (கன்னட) ராஜ்ஜியத்தின் மக்கள் தொகை ஆயிரத்திற்கு 214 பேர்கள் வீதம் பெருகி இருக்கிறது.

ஆந்திர ராஜ்ஜியத்தின் மக்கள் தொகை ஆயிரத்திற்கு 157 பேர்கள் வீதம் பெருகி இருக்கிறது!

சென்ற மாதத்தில் எடுக்கப்பட்ட மக்கள் தொகைக் கணக்கில் இருந்து இந்த விவரம் தெரிகிறது!

தமிழ் நாட்டு மக்கள் தொகை
(மாவட்ட வாரியாக)

சென்ற மாதத்தில் எடுக்கப்பட்ட மக்கள் தொகைக் கணக்கின் படி தமிழ் நாட்டின் மொத்த மக்கள் தொகை 3 கோடியே 36 லட்சத்து 50 ஆயிரத்து 917 பேர்கள். இவர்களில் ஆண்கள் 1 கோடியே 69 லட்சத்து 15 ஆயிரத்து 454 பேர்கள். பெண்கள் 1 கோடியே 67 லட்சத்து 35 ஆயிரத்து 463 பேர்கள். மாவட்ட வாரியாக மக்கள் தொகை விவரம் பின் வருமாறு :

மாவட்டம்	ஆண்கள்	பெண்கள்	மொத்தம்
சென்னை	9,07,269	8,17,947	17,25,216
செங்கல்பட்டு	11,20,146	10,73,575	21,93,721
வட ஆற்காடு	15,80,023	15,61,960	31,41,983
தென் ஆற்காடு	15,33,815	15,07,305	30,41,120
சேலம்	19,46,374	18,79,975	38,26,349
கோவை	18,02,585	17,38,816	35,41,401
நீலகிரி	2,13,926	1,95,514	4,09,440
மதுரை	16,06,809	15,98,057	32,04,866
திருச்சி	15,80,243	15,89,356	31,69,599
தஞ்சாவூர்	16,12,973	16,36,987	32,49,960
இராமநாதபுரம்	11,76,371	12,44,572	24,20,943
திரு நெல்வேலி	13,30,907	13,98,560	27,29,467
கன்னியாகுமரி	5,04,013	4,92,839	9,96,852

உங்கள் ஊர் மக்கள் தொகை என்ன ?

1961-ம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்குப்படி தமிழ் நாட்டின் முக்கிய ஊர்களில் மக்கள் தொகை வருமாறு :-

சென்னை	17,25,216
செங்கல்பட்டு	26,217
காஞ்சிபுரம்	92,761
அரக்கோணம்	30,659
திருப்பத்தூர் (வட ஆற்காடு)	30,788
வேலூர்	1,13,580
கடலூர்	79,180
சேலம்	2,49,084
கோவை	2,85,263
ஈரோடு	74,102
திருப்பூர்	79,761
பொள்ளாச்சி	54,545
ஊட்டி	50,134
கூனூர்	30,724
திண்டுக்கல்	92,618
மதுரை	4,24,975
திருச்சி	2,49,933
புதுக்கோட்டை	50,482
கும்பகோணம்	92,554
தஞ்சை	1,10,968
நாகப்பட்டினம்	59,100
காரைக்குடி	43,686
விருதுநகர்	54,871
ஸ்ரீவில்லிபுத்தூர்	46,754
இராஜபாளையம்	71,222
தூத்துக்குடி	1,24,273
திருநெல்வேலி	87,918
நாகர்கோவில்	1,06,497

தஞ்சை சரஸ்வதி மகால் நூல் நிலையம்

இந்தியாவுக்கு இப்போது அதிக அளவில் வந்து கொண்டிருக்கிற அந்நியநாட்டு யாத்திரிகர்கள் இங்கே உள்ள மக்கள், அவர்கள் பேசுகிற பாஷைகள், கலாசார வேறுபாடுகள் இலக்கியம், மதங்கள் முதலிய அம்சங்களில் இருந்துவருகிற பல் வகை வேறு பாடுகளைக் கண்டு ஆச்சரியப் படுகிறார்கள். இவ்வாறு இத்தனை வகை வேறுபாடுகள் இருந்த போதிலும் இங்கே நிலவுகிற அடிப்படை ஐக்கிய பாவம் எப்படி ஏற்பட்டது என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புவது இயல்பு. அதைத் தெரிந்து கொள்ள வேண்டுமானால், அவகாசமுள்ளவர்கள், ஆர்வமுள்ளவர்கள் தஞ்சாவூரில் உள்ள சரஸ்வதி மகால் நூல் நிலையத்துக்கு விஜயம் செய்யலாம். இந்த ஒற்றுமை எப்படி உருவாகியது என்பதை அங்குள்ள அரிய, அபூர்வமான சுமார் 30,000 சுவடிகள் விளக்கிக் காட்டும். இந்த நூலகம் உலகத்திலுள்ள கையெழுத்துச் சுவடிகளுக்கான நூலகங்களில் மிகப் பெரியதாகும்.

பண்டைய சோழப்பேரரசின் தலை நகராகவும் பிற்காலத்தில் நாயக்க மன்னர்கள் மகாராஷ்டிர மன்னர்கள் ஆகியோர்களின் தலை நகராகவும் விளங்கிய தஞ்சை காவேரி தீரத்தின் கல்விக் களஞ்சியமாகும். இந்நூல் நிலையத்தில் சோழ மன்னர்கள் காலத்திய சுவடிகள் மூலக் கருவாக விளங்குகின்றன. சோழ மன்னர்கள் காலம் முதல் கட்டப்பட்ட சுமார் 70 கோயில்கள் தஞ்சையில் உள்ளன. பிருஹதீஸ்வரர் கோயில் என்னும் பெரிய கோயில் கோபுரம் 216 அடி உயரமுள்ளது. அங்குள்ள சிற்பங்களும் ஓவியங்களும் அதியற்புதமானவை. சோழ மன்னர்களின் மாட்சிக்கும், ஆற்றலுக்கும். அக்காலத்திய கட்டடக்கலைத் திறனுக்கும் அக்கோயில் எடுத்துக் காட்டாக விளங்குகிறது.

தஞ்சைக்கு வருபவர்கள் அங்குள்ள அரண்மனையைப் பார்க்காமல் இருக்க முடியாது. நகரில் எங்கிருந்தாலும் அது தெரியும். விசாலமான மஹால்களும், அகன்ற தாழ்வாரங்களும் கூடங்களும் கொண்ட பற்பல கட்டடங்கள் கொண்டது அரண்மனை. நாயக்க மன்னர்கள் காலத்தில் கொலு மண்டபமாக இருந்த இடத்தில்தான் இப்போது சரஸ்வதி மகால் நூல் நிலையம் இருக்கிறது. புராதன சுவடிகளின் களஞ்சியம் அமைவதற்கு மிகப் பொருத்தமான இடம் இது.

தற்கால விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் இவ்வளவு அபிவிருத்தி யடைந்துள்ள இக்காலத்தில் பழைய ஏட்டுச் சுவடி

களுக்கு என்ன முக்கியத்துவம் என்று யாராவது கேட்கக் கூடும், மனிதனின் ஆக்க வேலைத் திறமை பல வகையாகவும் பல்வேறு அளவிலும் இருப்பதால் காரிய சாதனைகளுக்குக் காரணமாயிருந்த அடிப்படைக் கருத்துக்கள் எப்படி எங்கே உதயமாயின. எப்படி உருவெடுத்தன என்று நமக்குச் சிந்தித்துப் பார்க்கத் தோன்றுவதில்லை.

அந்த வரலாற்றை ஆராய்வது முக்கியம். இன்றைய அபிவிருத்தியை நன்கு உணர்வதற்கு, அந்த அபிவிருத்திக்கு மூல காரணமாய் முன் காலத்தில் எழுந்த கருத்துப்பற்றி ஆராய வேண்டும். அந்த ஆராய்ச்சிகளுக்கு முற்கால ஏட்டுச் சுவடிகளும், கையெழுத்துப் பிரதிகளும் ஆதார சாதனங்களாகும். மனித சமுதாயத்தின் அறிவு, ஞானம் ஆகியவைகளின் வளர்ச்சியை சிற்பங்கள், சிலைகள், புதைபொருள்கள், புராதன சின்னங்கள் மூலம் உணரலாம்; ஆனால் பெரும்பாலான சான்றுகள் எழுத்து ரூபத்தில் உள்ள நூல்களில்தான் உள்ளன. இந்நூல்கள் ஏட்டுச் சுவடிகளில்தான் அதிகமாக வுள்ளன இந்தியாவில். ஏனென்றால் அச்சடிப்புக் கலை இங்கே சற்றுப் பிந்தித்தான் வளர்ச்சியடைந்திருக்கிறது.

ஏட்டுச் சுவடிகளும் கையெழுத்துப் பிரதிகளும் ஏராளமாயிருக்கிற சரஸ்வதி மகால் நூலகத்தில் சோழர் காலத்திய சுவடிகள் முதல் உள்ளன. ஆயினும் மகாராஷ்டிர மன்னர் ராஜா சரபோஜி காலத்தில்தான் சுவடிகளின் எண்ணிக்கை ஏராளமாகப் பெருகியது. எனவே இந்நூல் நிலையத்துக்கு அம் மன்னர் பெயரிடப்பட்டிருக்கிறது.

சரபோஜி மன்னர் பல இந்திய மொழிகளிலும் ஐரோப்பிய பாஷைகளிலும் வல்லவராயிருந்தார். அவர் பல கலைகளில் ஆர்வமுள்ளவராகவுமிருந்தார். பல தேசங்களுக்குச் சென்று அநுபவமும் பெற்றிருந்தார். அவர் பல நாடகங்களையும் கவிதைகளையும் இயற்றி யிருக்கிறார். குழந்தைகளுக்காக பூகோள சாஸ்திரத்தைக் கவிதை ரூபத்தில் இயற்றியிருக்கிறார். அவரது தேவேந்திர குறவஞ்சி ஓர் அரிய நூல். அவர் கல்வி நிலையங்களை ஏற்படுத்தியதோடு அச்சு இயந்திர சாலையொன்றையும் அமைத்திருந்தார். அதில் கல்லில் வடித்த அச்சுக்கள் உபயோகிக்கப் பட்டன. வைத்திய த்துறை வல்லுனரையும் அவர் ஆதரித்து வந்தார். 18 தொகுதிகளில் வெளியிடப் பட்டுள்ள அவரது "சரபேந்திர வைத்திய முறைகள்" மிகப்பிரபலம் வாய்ந்ததாகும். சுவடிகள் ஏடுகள் மட்டுமின்றி பைண்டு செய்துவைக்கப் பட்டுள்ள சஞ்சிகைத் தொகுதிகள், படப் புத்தகங்கள், ஓவியத் தொகுப்புகள் முதலியனவும் இந் நூல் நிலையத்தில் உள்ளன.

சமஸ்கிருத நூல் சுவடிகள் தான் எண்ணிக்கையில் ஏராளமாயிருக்கின்றன. மந்திர, சாஸ்

திர வேதநூல்களில் அரிய, அபூர்வ கிரந்தங்கள் அங்கே உள்ளன. ஆநந்த காண்டம் என்னும் வைத்திய-ரசாயன நூலில் அணுபௌதிக ஆராய்ச்சியும் காணப்படுகிறது. அசுவ சாஸ்திரம், கஜசாஸ்திரம், சித்திர விளக்கமுள்ள ரிக்வேதம் ஆகியவை பிரபல நூல்களாகும்.

மராத்தி மொழியிலுள்ள பல நூல்களில் பெரும்பாலானவை சரபோஜி எழுதியவை. சுமார் 250 வருஷங்களுக்கு முன் சாந்த மாதவசுவாமி விசித்திர விளக்கம் செய்த ராமாயணம், மகாபாரதம் முதலியவை இன்னும் புத்தம் புதிய தோற்றத்துடன் காட்சியளிக்கின்றன.

நாயக்க மன்னர்களும் அவர்களின் இராணியாரும் தெலுங்கில் ஏராளமான நாடகங்களையும் இசை நாடகங்களையும் இயற்றி இருக்கின்றனர்.

தமிழில் குறள் நூலும் அதற்கான பல உரைகளும் சோழர் காலத்திய சிறந்த நூல்களும் இங்கே இருக்கின்றன.

இந் நூல் நிலையச் சுவடியில் மற்றொரு விசேஷம். தெலுங்கு லிபியில் சமஸ்கிருத நூல்கள், தமிழ் எழுத்தில் தெலுங்கு நூல்கள், தெலுங்கு, நாகரிலிபி இது களில் தமிழ் நூல்கள் ஆகியவை எழுதிவைக்கப் பட்டிருப்பதாகும். பல மக்களுக்கும் அறிவைப் பரப்புவதற்கான ஒரு சிறந்த முயற்சியாகும். ஓலை ஏடுகளிலும், காகிதத்திலும் எழுதப்பட்டுள்ள இந்நூல்கள் இந்தியாவின் பல பகுதிகளையும் சேர்ந்த 11 பாஷைகளில், உள்ளன. இந்திய ஐரோப்பிய பாஷைகளிலுள்ள புத்தகங்கள் மனித அறிவின் சகலதுறைகளையும் அடக்கி வியாபித்து நிற்கின்றன.

சரபோஜி மன்னரின் பின் சந்ததியார்கள் இந் நூல் நிலையத்தைச் சிதைத்துவிடாமல் ஓரே முழுசாக வைத்து வந்தார்கள். 1918-ல் இது ஒரு பொது டிரஸ்ட் சொத்தாக்கப் பட்டது. தனிப்பட்டவர்கள் சேர்த்துவைத்திருந்த நூல்களும் இதற்கு வழங்கப்பட்டன. உதாரணமாக, ஜம்பு நாதபட் தொகுப்பு, காலால்கார் தொகுப்பு, படாங்க அவதூத தொகுப்பு ஆகியவைகளைக் கூறலாம். அந் நூல் நிலையத்தை நிர்வகிப்பதற்காக நியமிக்கப்பட்ட கமிட்டி அங்குள்ள சமஸ்கிருத நூல்களின் பட்டியலை 19 தொகுதியாக வெளியிட்டிருக்கின்றது. தமிழ், தெலுங்கு, மராத்தி நூல்களின் பட்டியல்களும் பிரசுரிக்கப் பட்டுள்ளன. அச்சாகியுள்ள பிரெஞ்சு, இத்தாலிய, லத்தின், கிரேக், நூல்களின் பட்டியல்களும் வெளியிடப் பட்டுள்ளன.

(வானொலி)

கற்பனைக் கதை :—

"அழைப்பிதழ்"

தாமரைக் கண்ணன்

மதியம் உணவுக்குப் பள்ளியை விட்டார்கள். மிகவும் களைப்பாக இருந்தது. ஓய்வு அறைக்குச் சென்று. அமர்ந்தேன். பியூன் ஓடி வந்து 'யாரோ உங்கள் நண்பராம்—தங்களை அவசரமாகப் பார்க்க வேண்டுமாம். வெளியில் நிற்கிறார்' என்றான்.

வெளியில் வந்தேன். புங்கமரத்தடியில் ஆனந்தன் நின்று கொண்டிருந்தான். 'வா, ஆனந்தன்! செங்கற்பட்டிலிருந்து தானே வருகிறாய்?' என்றேன். 'ஆமாங்க அண்ணா! ஒரு முக்கியமான விஷயம். தாங்கள் இப்போதே தங்கள் அறைக்கு வர வேண்டும்' என்று என் கைகளைப் பற்றிக் கொண்டான். அரைநாள் சிறுவிடுதி எடுத்துக் கொண்டு அவனை, என் அறைக்கு—தண்டையார் பேட்டைக்கு—அழைத்துச் சென்றேன். அறையின் உள் தாழ்ப்பாளைப் போட்டுவிட்டு இருவரும் அமர்ந்தோம்.

'என்ன ஆனந்தன்? ஏதோ பதட்டத்துடன் இருக்கிறாய். அப்படி என்ன முக்கியமான விஷயம்?' என்றேன். 'அதைச் சொல்லத்தானே அண்ணா உங்களிடம் ஓடிவந்தேன். நான் உங்களை நண்பராகக் கருதவில்லை. உடன் பிறந்த சகோதரராகவே எண்ணியுள்ளேன்,' என்றான். அவன் நா தழுதழுத்தது; கண் கலங்கினான். 'சேச்சே! இது என்ன குழந்தையைப் போல? தைரியமாகச் சொல்லு. நான் இருக்கிறேன்' என்றேன்.

அவன் மனதைத் திடப்படுத்திக் கொண்டு, "செங்கற்பட்டில் உங்களுக்கு சரசு தெரியுமல்லவா? அவளுக்கு அவர்கள் வீட்டில் திருமணத்திற்கு ஏற்பாடு செய்கிறார்கள். அவளோ என்னைத் தவிர வேறு யாரையும் கட்டிக்கொள்ள மறுக்கிறாள். நானும் அவளுக்கு வாக்கு கொடுத்திருக்கிறேன். அவள் அப்பாவோ 'சாதி விட்டு சாதியிலா கல்யாணம் செய்து கொடுப்பது' என்று துள்ளுகிறார். சரசு, 'நாம் எங்கேயாவது போய் விடலாம்' என்று என்னைத் தொந்தரவு செய்கிறாள். 'இல்லாவிட்டால் ஆற்றிலோ குளத்திலோ இறங்கி விடுவேன்' என்கிறாள். எனக்கு ஒன்றுமே புரிய

வில்லை" என்றான், குழப்பத்துடன். 'தையல் மிஷினை விற்று இருநூறு ரூபா வைத்திருக்கிறேன். அங்கு நிலைமை மோசமாக இருந்தால் அழைத்து வந்துவிட எண்ணுகிறேன். நீங்கள் சொன்னால், எதையும் தங்கள் இஷ்டப்படியே செய்வேன்' என்று முடித்தான்.

அவர்கள் வந்து விட்டால்,—தேவையற்ற பாகுபாட்டைக் கடைப் பிடிக்கும்-பெற்றார் மனம் புண்படும். ஆனால் அவர்கள் தாங்களாகவே வரவழைத்துக் கொள்ளும் அந்தக் கவலையை விட, அவசியமற்ற கட்டுப்பாடுகளாலும் பிரிவாலும், காதலர் படும் துன்பம் பெரிது அல்லவா?

'தவிர்க்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டால் அழைத்துக் கொண்டு வந்துவிடு' என்று அவன் கூறியதை ஆதரித்தேன். 'நல்லது அண்ணா! நான் இப்போதே கொருக்குப்பேட்டை போய் வண்டி ஏறி ஊருக்குப் போகிறேன்' என்று நன்றி நிறைந்த பார்வையோடு விடைபெற்றுச் சென்றான், அவன்.

நான் கட்டிலில் படுத்தேன். ஆனந்தனைப் பற்றியே என் எண்ணங்கள் சுழன்றன. அவன், நான் செங்கையில் படித்தது முதல் எனக்குப் பழக்கம். தையற்கடை வைத்திருந்தான். எவ்வளவோ நல்லவன் ஏனோ இப்படிப்பட்ட சூழலுக்கு ஆளாகிவிட்டான்.

சிந்தனை அலைகளுக்கிடையில் நேரம் போனதே தெரியவில்லை. சோறு ஆக்க நேரமாகி விட்டது. எழுந்து அடுப்பு பற்ற வைத்தேன். அப்போது இரவு மணி ஒன்பது இருக்கும். அடுப்பில் பொங்கி எழுந்த புகையுடன் போராடிக் கொண்டிருந்தேன். அப்பப்பா! திருமணம் இல்லாமல், வெளியூரில் அதுவும் சென்னையில் வாழும் தனிவாழ்வு எவ்வளவு துன்பமானது?

அறையினுள் யாரோ நுழைந்த ஒலி கேட்டது. திரும்பிப் பார்த்தேன். ஆனந்தன்! அவன் அருகில் சரசு!!

'நீங்கள் அமருங்கள்' என்று அடுப்பு வேலை முழுவதையும் சரசுவே செய்தாள். பலநாள் பழகியவளைப் போல கலகலப்பாக அவள் என்னிடம் பழகியது எனக்கு ஆச்சரியமாகவே இருந்தது.

ஆனந்தனின் நண்பர் பொய்யாது என்பவர் வண்ணையில் போலீஸ் வேலை பார்த்து வந்தார். அவர் உதவியால் வண்ணையிலேயே ஒரு வீடு குடிக்கூலிக்குக் கிடைத்தது. மறு நாளே ஆனந்தனும் சரசுவும் அவ்வீட்டிற்குக் குடி சென்றனர். நானும் ஓய்வு கிடைத்த போதெல்லாம் சென்று அவர்களைப் பார்த்து வந்தேன்.

ஒரு திங்கள் கழிந்தது. ஒரு நாள் மாலை நான் பள்ளியிலிருந்து அறைக்கு வந்தேன். யாரோ தெரியவில்லை. சன்னல்

வழியாக அறைக்குள் ஒரு கடிதத்தைப் போட்டிருந்தார்கள். திகைப்புடன் அதைப் பிரித்துப் படித்தேன்.

அன்புள்ள ஆசிரியர் அவர்களுக்கு! வணக்கம். தொடர்பில்லாத நான் தங்களுக்குக் கடிதம் எழுதுகின்றேன். என் தங்கை சரசுவும், நண்பர் ஆனந்தனும் தங்கள் ஆதரவில் இருப்பது குறித்து மிக்க மகிழ்ச்சி. தங்களை நேரில் சந்திக்க இதயம் துடிக்கிறது. என்னை இன்று இரவு ஏழு மணிக்கு இராயபுரம் கடற்கரையில் சந்தியுங்கள். காத்துக் கொண்டிருப்பேன்.

சரோஜா.

சரோஜாவை செங்கையிலிருந்தபோது பார்த்திருக்கிறேன். சரசுவின் தமக்கை. ஆனந்தன் தையற்கடைக்கு அவளும் சரசுவும் அடிக்கடி வருவார்கள். ஆனாலும் எனக்குப் பழக்கமில்லை. சரோஜா சூளையில் ஒரு அலுவலகத்தில் வேலை செய்து கொண்டிருந்தாள். அவள் திடீரென்று எதற்காக இப்படி ஒரு கடிதத்தை எழுதியிருப்பாள்? சரசுவைப் பற்றி எழுதியுள்ளாளே — அவளுக்கு எப்படித் தெரியும்? ஒரு வேளை அவளைச் சந்தித்திருப்பாளோ?

தங்கம் சினிமா கொட்டகை வரை நடந்து சென்று, பஸ் ஏறி வண்ணையம்பதிக்குச் சென்றேன். நான் சென்றபோது, ஆனந்தன் வீட்டில் இல்லை. சரசு தான் என்னை வரவேற்றாள்.

நான், 'நீங்கள் இங்கு இருப்பது சரோஜாவுக்குத் தெரியுமா சரசு' என்று அவளைக் கேட்டேன்.

'தெரியும், அண்ணா! இன்று காலை நான் கடைக்குச் சென்றபோது சரோஜாவைப் பார்த்தேன். இத்தனை நாளும் என்னைத் தேடித்தேடி சென்னை முழுவதும் அலைந்தாளாம். பிறகு, வீட்டிற்கு அழைத்து வந்தேன். அவரும் இருந்தார். நான் வந்துவிட்ட பிறகு, செங்கற்பட்டில் அப்பாவும் அம்மாவும் சரியாகவே சாப்பிடுவதில்லையாம். அப்பா பைத்தியம் பிடித்தவரைப்போல அலைகிறாராம். அம்மாவும் அதிகமாக இளைத்து விட்டார்களாம். எல்லாம் சரோஜா சொன்னாள்' என்றாள். 'என்னையும் அவரையும் வீட்டிற்கு வரும்படி கூப்பிட்டாள். இப்போது சென்றால் ஒன்றுமே கேட்கமாட்டார்களாம். நடந்ததுதான் நடந்துவிட்டதே என்று இருவரையும் வீட்டிலேயே வைத்துக்கொள்வார்களாம்' என்றாள், சரசு.

'அதற்கு ஆனந்தன் என்ன சொன்னான்?'

'எதுவும் எங்கள் இஷ்டம் இல்லை. உங்கள் பெயரைச் சொல்லி, எல்லாம் அவர் இஷ்டம்தான் என்று முடிவாகச் சொல்லிவிட்டார். சரோஜா உங்கள் அனுமதியைப் பெற உங்கள் முகவரியைக் கேட்டாள். அவர் கொடுத்தனுப்பினார்.'

சரோஜாவின் கடிதம் என் அறையில் எழுந்தருளியதன் காரணத்தை ஒருவாறு புரிந்து கொண்டேன். 'ஆனந்தன் எங்கே, சரசு?' என்று கேட்டேன். 'உங்களைப் பார்க்கத் தண்டையார்ப் பேட்டைக்குத்தானே வந்தார். அவர் வந்து அரைமணி நேரமாகிறதே' என்றாள். 'சரி, ஒருவேளை நடந்து சென்றிருப்பான். வந்தால் நான் நாளை வந்து சந்திப்பதாகச் சொல், அம்மா' என்று எழுந்தேன்' இருங்கள். மணிகூட ஏழு அடித்துவிட்டது; சாப்பிட்டு விட்டுப் போகலாம்' என்றாள், சரசு.

மணி ஏழு என்றதும் சரோஜாவின் கடிதம் கவனத்திற்கு வந்தது. 'பரவாயில்லை, சரசு. நாளைக்கு வரும்போது சாப்பிடுகிறேன்' என்று சமாதானம் சொல்லிவிட்டு, இராயபுரம் கடற்கரைக்குச் சென்றேன்.

குறிப்பிட்ட இடத்தில் சரோஜா எனக்காகக் காத்திருந்தாள். என்னைக் கண்டதும் சந்திரனைக் கண்ட அல்லியெனெ அவள் முகம் மலர்ந்தது. அவளிடம் என்ன பேசுவதென்றே புரியவில்லை.

அவள் பவள இதழ்திறந்து, 'என்ன பேசுவதென்றே புரியவில்லை உங்களுக்கு! இல்லையா?' என்று தன் முத்துப் பல்வரிசையைக் காட்டினாள்.

'ம்...இல்லை......இல்லை......! நிமிர்ந்து அவளைப் பார்த்தேன். 'எதைப் பற்றிப்பேச உங்களை அழைத்திருப்பேன் என்று எண்ணினீர்கள்?' என்று கேட்டுக் கொண்டே என்னை ஏறிட்டு நோக்கினாள். அவள் கொவ்வை இதழ்களுக்கிடையில் குறும்புப் புன்னகை ஒன்று நெளிந்தோடி, என் இதயத்தில் கிளுகிளுப்பைக் குழைத்துப் பூசியது. 'உங்களை நேரில் பார்க்க ஆவலுடன் இருந்தேன். என் நீண்ட நாள் கனவு இன்றுதான் பலித்தது. உங்களிடம் நிறையப் பேச வேண்டும். நாளை காலை எட்டு மணிக்கு மெரினா ஓட்டலுக்கு உங்களால் வரமுடியுமா?' என்று கேட்டாள். 'ஓ—வர முடியுமே' என்றேன். 'அதிகமாக இருட்டிவிட்டது. நாளை பார்ப்போம்' என்று பிரியா விடை பெற்றாள். நானும் கொந்தளித்த இதயத்தோடு இல்லம் அடைந்தேன்.

மறுநாள் மெரினாவில் சந்தித்தோம். எவ்வளவோ பேசினாள். நானும் பேசினேன். என் கருத்துக்களை எல்லாம் அவள் ஆதரித்தாள். 'சரசு—ஆனந்தன் திருமணத்தை நானும் விரும்புகிறேன். என் பெற்றோர் பழங்காலப் பேர்வழிகள். அவர்கள் கொள்கைகளோ எனக்குப் பிடிப்பதில்லை' என்றாள்.

நாளுக்கு நாள் நானும் சரோஜாவும் ஒருவரை ஒருவர் நெருங்கிக் கொண்டிருந்தோம். என் இதயத்தில் அவள் பூரணமாக இடம் பெற்றாள். நானும் அவள்

இதயத்தில் இடம் பெற்றிருக்கத் தான் வேண்டும். என் நம்பிக்கை அது!

சில சமயங்களில் நான் அவள் வீட்டிற்குச் சென்றிருக்கிறேன். அப்போதெல்லாம் என்னை அன்புடன் ஏற்று உபசரிப்பாள். ஒவ்வொரு சந்திப்பின்போதும் அவள் என்பால் காட்டிய அன்பு அளவுக்குமீறியிருக்கும். என்னிடமிருந்து எதையாவது எதிர் பார்த்து, அதைப் பெறுவதற்காகவே அன்புள்ளவளைப்போல நடிக்கிருளோ என்ற சந்தேகத்தையும் உண்டாக்கும்.

சே! என்ன கேவலமான எண்ணம்? என் சரோஜாவா அப்படிச் செய்வாள்?

ஒரு ஞாயிற்றுக்கிழமை மாலை நாங்கள் நால்வரும் கடற்கரை செல்வதற்குத் திட்டமிட்டிருந்தோம். அன்று குறிப்பிட்ட நேரத்திற்கு முன்பே ஆனந்தன் என்னை அழைத்துச் செல்ல வந்தான். அவன் முகம் களையிழந்திருக்கிறது. சரோஜா வந்த பிறகு சரசுவின் பேச்சிலும் நடத்தையிலும் பல மாற்றங்கள் காணப்படுகின்றன என்றான், என்னிடம்.

என் மனம் துணுக்குற்றது. 'என்ன மாற்றம்' என்று பரபரப்புடன் கேட்டேன். 'அது என்ன மாற்றம் என்று என்னால் விளக்கமாகச் சொல்ல முடியவில்லை. ஆனால் அவள் மாறி வருகிறாள் என்பது மட்டும் நன்றாகத் தெரிகிறது. தனிமையில் இருக்கும்போது அழுது கொண்டிருக்கிறாள்' என்றான். நாங்கள் இருவரும் பேசிக்கொண்டே வண்ணைக்கு வந்தோம். அவன் வீட்டுக் கூடத்தில் நுழைந்தபோது, உள்ளே சரோஜாவின் பேச்சுக் குரல் கேட்டது.

சரோஜா, 'உன்னால்தானே குடும்ப கௌரவமே போயிற்று. பெண்ணாகப் பிறந்தும் மானம் போன பிறகு வாழ்கிறாயே, நீயும் ஒரு பெண்ணா? காலம் நேரம் பார்க்காமல் ஈ எறும்பு மொய்க்காமல் நம்மைத் தூக்கி வளர்த்தவர்களுக்கு அழியாத அவமானத்தை உண்டாக்கி விட்டாயே......' என்று சரசுவைக் கடிந்துகொண்டிருந்தாள். இடையிடையே சரசுவின் விம்மல் கேட்டது. நான் ஆனந்தனைப் பார்த்தேன். ஆனந்தன் தலை குனிந்தான். அதற்குள் சன்னல் வழியாக சரோ எங்களைப் பார்த்துவிட்டுக் கூடத்திற்கு வந்தாள். அவள் முகத்தில் புன்முறுவல் தவழ்ந்தது: கடுமையைக் காணோம்!

பிறகு நால்வரும் கடற்கரைக்குச் சென்றோம். கும்பலாக வெண்மணற் பரப்பில் அமர்ந்தோம். பேச்சின் இடையில் சரோஜா 'நான் இல்லை என்றாலும் வீட்டில் அம்மாவும் அப்பாவும் பொறுத்துக்கொள்வார்கள். சரசுவின்மீது அவர்களுக்கு உயிர். இப்போதுகூட நீங்கள் சம்மதித்தால் இருவரையும் செங்கற்பட்டிற்கு அழைத்துச் செல்

வேன்' என்றாள். "அதெப்படி முடியும்? ஆனந்தன்மீது உங்கள் வீட்டில் எல்லோரும் வெறுப்பாக இருப்பார்களே" என்றேன்.

'இருப்பார்கள்' 'உண்மைதான். ஆனால் நமது கோரிக்கைக்கு அவர்களை இணங்கவைக்க என்னால் முடியும். காரியம் ஆக வேண்டுமானால் எப்படிப்பட்டவர் மனதையும் நான் மாற்றிவிடுவேன்' என்றாள் சரோ.

'அதுதான் என் மனதைக் கவர்ந்ததிலிருந்தே தெரிகிறதே' என்றேன் நான். மூவரும் வாய்விட்டுச் சிரித்தனர்.

சரோஜா, 'நான் இவ்வளவு வற்புறுத்துவதால் நீங்கள் எதையும்தவறாகக் கருதிவிடக்கூடாது. அப்பா அம்மா வயதானவர்கள். சரசு வந்துவிட்டபிறகு எவ்வளவோ உணர்ந்து சீர்திருத்தம் பேசுகிறார்கள்.உண்மையை இப்போதுசொல்கிறேனே. ஆனந்தனையும் சரசுவையும் வீட்டிற்கு அழைத்து வந்து விடும்படி அப்பாவே எனக்குக் கடிதம் எழுதியுள்ளார்' என்றாள். நாங்கள் ஆச்சரியப்பட்டோம். 'இப்போதுசென்றால், யாராவது ஒரு தலைவரை அழைத்துச் சீர்திருத்தத் திருமணமே செய்து வைத்துவிடுவார்' என்றாள். ஏனோ தெரியவில்லை. ஆனந்தன் செங்கைக்குச் செல்ல மறுத்தான்.

'யாருக்கும் தெரியாமல் வந்துவிடுவது கேவலம் என்றும் முறைப்படிப்பலர் அறிய மணசெய்விப்பது பெருமை என்றும் அவர்கள் வீட்டில் நினைக்கிறார்கள் போலும். நமக்கென்ன ஆனந்தன், சரசுதானே வேண்டும்? அவர்கள் எண்ணப்படி அவர்கள் மனத்தைத் திருப்தி செய்துவிடேன்' என்றேன்.

'மற்றவர்கள் திருப்தியடைய வேண்டும் என்பதற்காக அர்த்த மற்ற காரியங்களைச் செய்வது, கெடுதியைத்தான் அண்ணா விளைவிக்கும்' என்றான் அவன். என்னை மீறிப்பேசுவதாக நான் நினைத்துக்கொள்ளக் கூடாது என்று, 'வேண்டுமானால் இப்போது சரசு மட்டும் போகட்டும். அவள் சென்று கடிதம் எழுதினால் அதன் பிறகு நான் போகிறேன்' என்றான். சரோ இதற்குச் சம்மதித்தாள். ஊருக்குப் போனதுமே தன் தந்தையைச் சரிப்படுத்தித் திருமணத்திற்கு ஏற்பாடு செய்வதாக உறுதியளித்தாள். 'கையோடு கையாக இப்போதே நம்மைப் பற்றியும் அவர் காதுகளில் போட்டுவை' என்றேன், நான். அவள் சிரித்துக்கொண்டே தலையைக் கவிழ்ந்தாள்.

ஆனந்தன் எழுந்து சென்று சற்று தூரம் தள்ளி அமர்ந்தான்; சரசு அவனைப் பின் தொடர்ந்து சென்றாள்.

நான் மணலைச் சமமாகத்தள்ளி 'சந்தானம்' என்று என் பெயரை எழுதினேன். அதன் அடியில் 'சரோஜா' என்று தன் பெயரை எழுதினாள், சரோ. கருங்கட

வின் தலைமையில் கையெழுத்திட்டு நாங்கள் இருவரும் வாழ்க்கை ஒப்பந்தம் செய்து கொண்டதாக நான் மனம் பூரித்தேன். சரோஜா தன் இதயம் முழுதையும் எனக்குத் திறந்து காட்டி விட்டதாக எண்ணிக் கொண்டேன்.

இரண்டு நாள் கழித்து சரசுவும் சரோவும் ஊருக்குப் புறப்பட்டார்கள். அவர்களை வண்டியேற்றுவதற்காக எழும்பூர் நிலையத்திற்கு நானும் ஆனந்தனும் வந்தோம்.

இருவரும் வண்டியில் ஏறி அமர்ந்தனர். சரசு கலங்கிய கண்களுடன் ஆனந்தனை நோக்கினாள். அப்பார்வையில் விவரிக்க முடியாத ஏக்கம் கலந்திருந்தது. வண்டி புறப்பட்டது. கூப்பிய கரங்களுடன் இருவரும் விடை பெற்றனர்.

நாட்கள் பறந்தன. செங்கற்பட்டைப் பற்றிய தகவலே இல்லை. ஆனந்தன் சிறகொடிந்த பறவையாக அறையிலேயே அடைபட்டுக் கிடந்தான்.

இருபது நாட்களுக்குப் பிறகு சரோஜாவைப் பார்த்து வரும்படி ஆனந்தனைச் சூளைக்கு அனுப்பினேன். சரோஜா அவனை நல்ல முறையில் வரவேற்கவில்லையாம், அவனிடம் சரியாகப் பேசவில்லையாம். இதை அவன் என்னிடம் கூறியபோது அதிகமாக வருந்தினேன்.

சரோஜாவைப் பார்க்காமல் என்னால் இருக்கவே முடியவில்லை. ஆனந்தனின் துன்பம் வேறு பொறுக்கமுடியாததாக இருந்தது.

நானே ஒரு நாள் சூளைக்குச் சென்றேன். அவள் குடியிருந்த வீடு சாதாரணமாக மூடப்பட்டிருந்தது. அங்கு வீதியில் விளையாடிக் கொண்டிருந்த பையனிடம் நான் வந்திருப்பதாகச் சொல்லியனுப்பினேன். சற்று நேரத்தில் அவள் வந்தாள். அவள் பின்னாலேயே ஒரு அழகிய வாலிபன் வந்து வாயிற்படியில் நின்றான்.

சரோஜா என்னை முன்பின் அறிந்தவளாகவே காட்டிக் கொள்ளவில்லை. 'யாரைப்பார்க்க வேண்டும்' என்று அறிமுகம் இல்லாதவனைக் கேட்பதுபோலக் கேட்டாள். நான் ஒரே அதிர்ச்சியடைந்தேன். ஒரு ஆசிரியரைப் பார்க்கவேண்டும் என்றேன். நீங்கள் வீடு தெரியாமல் வந்துவிட்டீர்கள். அப்படி யாரும் இங்கில்லை என்று சொல்லிக் கொண்டே அலட்சியத்துடன் என்னைப் பார்த்துவிட்டு அந்த வாலிபனுடன் உள்ளே சென்று விட்டாள்.

நான் வெகு சாமர்த்தியமாக ஏமாற்றப்பட்டேன் — என்னைக் காரணமாக வைத்துக்கொண்டு ஆனந்தனும் ஏமாற்றப்பட்டான். என் மனம் அலைபாய்ந்துகொண்டிருந்தது. ஆனந்தன் அந்த அறையைக் காலி செய்துவிட்டு என் அறைக்கே வந்துவிட்டான்.

ஒருநாள் மாலை நானும் ஆனந்தனும் 'ராபின்சன்' பூங்காவில்

உட்கார்ந்திருந்தோம். பொய்யாது அவசர அவசரமாக ஓடி வந்து 'உங்களுக்குத் தெரியுமா, ஒரு சேதி. இது என் நண்பர் ஒருவருக்கு வந்தது. இதை உங்களுக்குக் காட்டவே வாங்கி வந்தேன்' என்று ஒரு 'கவரை என்னிடம் நீட்டினன். வாங்கிப் படித்தேன். அது ஒரு திருமண அழைப்பிதழ்.

" அழைப்பிதழ் "

அன்புடையீர்! நிகழும்........ யாண்டு ஆவணித் திங்கள் ......ம் நன்னாள் காலை 9 மணிக்கு எங்களுக்கு, மாமல்லபுரத்தில் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற விருப்பதால், தாங்கள் கேளும் கிளையும்சூழப்போந்து எங்களை வாழ்த்தியருளவேண்டுகிறோம்.

வணக்கம்.

தங்கள் அன்பு நனியார்ந்த,

சிவநேசன்—சரசு

சண்முகம்—சரோஜா

இதனைப் படித்து முடிப்பதற்குள் வியர்வையால் நனைந்து விட்டேன். தன் தங்கை ஒருவனுடன் ஓடிவிட்டாள் என்ற சொல்லால் தன் குடும்ப மானமே கெட்டுப் போய்விடும் என்று கருதி, சரசுவை வீட்டிற்கு அழைத்துச் சென்றுள் சரோஜா. ஆனால் அதற்காக அவள் கையாண்ட முறையால் அக் குடும்பமே அவமானச்சேற்றில் தள்ளப்பட்டுவிட்டது என்பதை வெளிப்பகட்டையும் போலியையும் விரும்பும் இச் சமூகம் எப்படி உணரப் போகிறது? குற்றம் சமூகத்தின் மீதுதான்! சரோஜாவின் மீதல்ல!!!

அழைப்பிதழா அது? இல்லை.... தமிழகத்தின் மறுமலர்ச்சியுகம் என்று வாய் கிழியக் கத்துகிறார்களே—அந்த வேகமாக வளர்ந்து வரும் நாகரீக சமுதாயத்தின் இன்றைய படப்பிடிப்பு...பிரதிபலிப்பு!!

கறை படிந்த அந்த அழைப்பிதழ் என் கைகளினின்றும் நழுவிக் கீழே விழுந்தது.

சொகுசான வாழ்வு

அமெரிக்கத் தலைவர் கென்னடி எழுதிய ஒரு கட்டுரையின் ஒரு பகுதி சென்ற இதழில் வெளியாகியிருந்தது. அதன் தொடர்ச்சி இது: கடந்த 15 ஆண்டுகளாக டாக்டர் ஹான்ஸ் கிராஸ்பம், டாக்டர் சோஞ்ஜா வெபரும் அமெரிக்கா, ஆஸ்திரியா, இத்தாலி, சுவிட்சர்லாந்து நாடுகளின் குழைந்தைகள் உடல் வலிமையைப் பற்றி ஆராய்ச்சி நடத்தியுள்ளார்கள். அவர்கள் வெளியிட்டுள்ள முடிவுகள் அமெரிக்கரைத் திடுக்கிடச் செய்யும். "உடல் தகுதிகளைப் பொறுத்த வரையிலும் அமெரிக்கக் குழந்தைகள் ஐரோப்பியக் குழந்தைகளைவிட எவ்வளவோ பிற்பட்ட நிலையில் உள்ளன. சில பரிசோதனைகளில் அமெரிக்கக் குழந்தைகளில் 100-க்கு 36 குழந்தைகள் தேறவில்லை; ஆனால் ஐரோப்பியக் குழந்தைகளில் ஒரு சதவீதந்தான் தேர்ச்சி பெறவில்லை."

இவ்வளவுக்கும், வாழ்க்கைத் தரத்தில் நம் நாடுதான் உலகிலேயே முதன்மையாக இருக்கிறது. நாம் உண்ணும் உணவு தான் மிகச் சிறந்தது என்று பெருமை பாராட்டிக் கொள்கிறோம்! பிரிட்டனிலும் ஜப்பானிலும் உள்ள இளைஞர்களுடன் ஒப்பிடுகையில், உடல் தகுதிகளில் அமெரிக்க இளைஞர்கள்தான் பின் நிற்கிறார்கள். யேல் பல்கலைக் கழகத்தில் நடத்திய பரிசோதனையில் 1951-இல் 100-க்கு 51, 1956-இல் 43, 1960-இல் 38—என்ற விகிதத்தில் மாணவர்களின் தேர்ச்சி குறைந்துகொண்டே வந்துள்ளது. உடல் தகுதிகளே எல்லாம் என்பதும் சரியல்ல; இருந்தபோதிலும், இந்த வீழ்ச்சிக்குக் காரணம் என்ன? உடல் வலிமையைப் பற்றி மக்களின் அக்கறை குறைந்து கொண்டே வருவதுதான். லேசான, சொகுசான வாழ்க்கை வாழவேண்டும் என்ற விருப்பம் இளைஞர்களிடையே பரவி வருவதுதான். இதனால் ஒரு நாட்டின் சக்தியே அழிந்து போய்விடும் நிலைமையும் ஏற்படும்.

மக்களின் உடல்வலிமைதான் ஒரு நாட்டின் விலைமதிப்பற்ற செல்வம். இதை நாம் பாழ்படுத்தினால் குறையும்படிச் செய்துவிட்டால் நம்முன் எழும் மாபெரும் நெருக்கடிகளைச் சமாளிக்க முடியாமற் போய்விடும். பின்னர் ஒரு நாடு என்ற முறையில் நாம் கொண்டுள்ள இலட்சியங்களை அடைவதும் இயலாது.

இளைஞர்கள் அனைவரும் போருக்குத் தயாராக இருக்க வேண்டும் என்பதற்காக அவர்கள் உடல்வலிமையுடன் இருக்க வேண்டும் என்று நான் கூறவில்லை. போரில் தங்கள் திறனைக் காட்டும் வாய்ப்பு அவர்களுக்கு ஏற்படவேண்டாம் என்பதே நமது விருப்பம். ஆனால் சமாதானத்தையும் சுதந்திரத்தையும் பாதுகாப்பதற்கும் உடல் வலிமை மிக மிக அவசியமானது.

உழைப்பில்லாமை, ஏராளமான பொருள்வளம்—இவ்விரண்டும் நமது உடல் வலிமையை அழித்துக் கொண்டே வருகின்றன. உடலைக் கொண்டு உழைப்பது குறைந்து கொண்டே வருகிறது. டெலிவிஷன், சினிமா, மற்றும் பல்வேறு சாதனங்களும் இளைஞர்கள் உடலுழைப்பில் ஈடுபடாதபடி செய்து வருகின்றன. இதைப் பற்றிச் சிந்தனையுள்ள அனைவரும் கவலைப்பட வேண்டும்.

நமது சுதந்திரத்தைப் பாதுகாக்க வேண்டுமானால், நமது இலட்சியங்களை நிறைவேற்ற வேண்டுமானால், நமது உடல் வலிமையுடன் விளங்குவதற்கான உழைப்பில் ஈடுபடவேண்டும். நமது குழந்தைகள் மற்றவர்களின் உழைப்பைப் பார்த்துக் கொண்டிருப்பவர்களாக ஆக வேண்டாம்; அதில் நேரடியாகப் பங்கு கொள்பவர்களாக ஆக வேண்டும் என்பதே நமது விருப்பம். —'கிராம ராஜ்யம்'

சென்னை மாவட்ட உதவிபெறும் ஆரம்பப் பள்ளி நிர்வாகிகள் சங்கம்

மேற்படி சங்கத்தின் பொதுக் கூட்டம் திரு. ஏ. ஆர். சேஷாசலம் அவர்கள் தலைமையில், 94-95, புதுத் தெரு, சென்னை, G.R.C. ஆரம்பப் பாடசாலையில் 14-3-1961 மாலை 5 மணிக்கு நடைபெற்றது. கீழ்க் கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன :

1. (a) சென்னையிலுள்ள ஆரம்பப் பாடசாலைகளுக்கு முக்கியமாக மாதாந்தர கட்டிட வாடகை (Rental Grant) கொடுக்கவேண்டும் என்றும், வாடகை கொடுத்த பிறகு நிர்வாகக் கிராண்டாக 10% சதவீதம் கொடுத்தால் போதுமானதென்றும், இம்மாதிரியே முனிசிபல் எல்லைக்குட்பட்ட எய்டட் ஆரம்பப் பள்ளிகளுக்கும் வாடகையும், 10 சதவீதம் நிர்வாக கிராண்டும் கொடுக்கும்படி அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளுகிறது.

(b) சொந்தக் கட்டிடம் உள்ள பாடசாலைகளுக்குக் கட்டிட ரிப்பேர், வெள்ளை அடித்தல் முதலிய செலவுகளுக்குப் போதுமான அளவு ஈடுசெய்ய நிர்வாகக் கிராண்டு 20% சதவீதம் கொடுக்க வேண்டும் என்றும் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுகிறது.

2. மேற்குறித்த தீர்மானத்தின்படி ஒரு மகஜர் தயாரித்து கனம் கல்வி மந்திரி அவர்களையும் கல்வி இலாகா டைரக்டர் அவர்களையும், சங்கத்தின் தலைவரும், காரியதரிசிகளும் பேட்டி கண்டு ஆவன செய்யும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது. எல்லா சட்டசபை அங்கத்தினர்களுக்கும் மகஜர்களை அனுப்பி சட்டசபையில் இதைப்பற்றி கேள்விகளை கேட்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

3. கல்வி இலாகா டைரக்டர் திரு. என். டி. சுந்தரவடிவேலு அவர்களுக்கு அண்மையில் அரசாங்கத்தார் **பத்ம ஸ்ரீ** என்ற பட்டம் வழங்கியதை ஒட்டி, அன்னாரைக் கவுரவிக்கும் பொருட்டு ஒரு தேநீர் விருந்து அளிக்கவும், வரும் ஏப்ரல் மாதம் சென்னையில் நிர்வாகிகள் மாநாட்டைக் கூட்ட ஏற்படும் செலவுக்காகவும், சென்னையிலுள்ள ஒவ்வொரு பாடசாலை நிர்வாகியும் ரூ. 10 திரு. பி. வீரராகவன் நிர்வாகி, ஜி. ராஜமன்னார் செட்டியார் ஆரம்பப் பாடசாலை, 94-95, புதுத்தெருவு, மண்ணடி, மதராஸ் என்ற விலாசத்திற்கு நேரில் அல்லது, M. O. மூலம் அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

K. கணேசன்
V. A. பாலகிருட்டினன்
செயலாளர்கள்.

பென்சில்கள் உற்பத்தி

நாம் எழுதுகிற பென்சில்கள் எப்படிச் செய்யப்பட்டன? ஆதியில் அவை எடுத்த உருவம் என்ன? இவை மிகவும்சுவையான கேள்விகள்.

400 ஆண்டுகளுக்கு முன்னால் வடமேற்கு இங்கிலாந்தில் கம்பர்லந்து என்கிற பகுதியில் தான் பென்சில் முதல் முதலாகச் செய்யப்பட்டதாம்.

1550-ம் ஆண்டில் ஒரு நாள் இரவு கடும்புயல் அடித்ததாம். மறுநாள் காலையில் பார்த்தால் எங்கும் மரங்கள் சரிந்துவிழுந்து கிடந்தனவாம். மரங்கள் சரிந்ததால் வெளிப்பட்ட வேர்கள் கருமை நிறமுள்ள ஒருவகை மண்ணைக்கிளப்பி யிருந்தனவாம். இது நிலக்கரியாக இருக்குமோ என்று முதலில் பார்த்தவர்கள் சந்தேகித்தனராம்.

எனவே இதை எரித்துப்பார்த்தார்கள்; எரியவில்லை. தொட்ட கைகளில் கருப்புச் சாயம் ஒட்டிக் கொண்டிருந்ததைக் கண்டார்கள் எனவே இதை எடுத்து ஆடுகளின்மீது அடையாளம் செய்து எந்த ஆடு யாருக்குச் சொந்தம் என்று குறிப்பு வைத்தார்களாம்.

சில வருடங்களுக்கு இந்தக் கரிய பொருள் வெட்டியெடுக்கப் பட்டாலும் இதன் முழு உபயோகமும் தெரியவில்லை. அரசாங்கத்திற்கு இந்தத் தகவல் தெரிந்தது. உடனே இந்தக் கரிய பொருள் வெட்டியெடுக்கப்பட்டு தக்க பந்தோபஸ்துகளுடன் ஒரு கோச் வண்டியில் லண்டன் நகருக்கு அனுப்பப்பட்டதாம்.

இந்தக் கருநிறப் பொருளுக்கு கிராபைட் (காரீயம்) என்ற பெயர் கொடுக்கப்பட்டது. பீரங்கிக் குண்டுகள் செய்ய இந்தப் பொருள் உபயோகிக்கப்பட்டது.

கம்பர்லந்தில் கிடைத்த இந்தக் காரீயத்தின் புகழ் கடல்கடந்து பல நாடுகளுக்கும் பரவியது. இந்தச் சமயத்தில் இங்கிலாந்தில் ராணி முதலாவது எலிஜபத் ஆட்சி புரிந்துவந்தார். சித்திரக் கலைஞர்கள் இதைக் கொண்டு சித்திரங்கள் தீட்டலாயினர். காரீயத்துண்டுகளை ஆட்டுத் தோலில் பொதிந்து ஒரு முனை கொண்டு கோடுகள் போட்டுப் படம் வரைந்துவந்தனர். பென்சில் இந்த உருவில்தான் முதல் முதலாகத் தோற்றமளித்ததாம்.

பிறகு காரீயத்தின் கூர்களை மரத்திற்குள் நுழைத்துப் பென்சில்களாக்க முடியும். முனை நழுவாது நிற்கும் என்று கண்டுபிடிக்கப்பட்டதாம். அன்று முதல் ஒரு குடிசைத் தொழிலாகப் பென்சில் உற்பத்தி ஆரம்பித்ததாம்.

கெஸ்விக் என்னும் இடத்தில் தான் முதன் முதலாகப் பென்சில்கள் உற்பத்தி செய்யப்பட்

டன. பல குடும்பங்கள் இதைத் தமது வீடுகளிலேயே ஓய்வு நேரப் பணியாக மேற்கொண்டன.

இப்போது இலங்கை, மெக்ஸிகோ, கொரியா முதலிய நாடுகளில் காரியம் கிடைக்கிறது. இப்போதும் கம்பர்லந்தில் பென்சில்கள் செய்யப்படுகின்றன. கருப்புப் பென்சில்கள் மட்டுமன்றி சுமார் 72 வர்ணங்களில் பென்சில்கள் செய்யப்படுகின்றன.

இப்போது பல நாடுகளில் பென்சில் உற்பத்தி நடைபெற்று வருகிறது. —'ஜனசக்தி'

நெடுநாள் உயிர் வாழ்வதெப்படி ?

(சென்ற இதழ் தொடர்ச்சி)

முதியவர்கள் உணவுவைச் சிறிய அளவுகளில் அடிக்கடி சாப்பிட வேண்டும்அப்போதுதான் இரைப்பையில் அதிக பாரமேற்படாது. வைட்டமின் மாத்திரைகளை உட்கொள்ளலாம். கொழுப்பு கரை திறனுள்ள வைட்டமின்கள் ஏ, டி,இ முதலியவற்றை உபயோகிக்கும்போது சற்று கவனம் செலுத்த வேண்டும். இல்லையெனில் சிற்சிலசிக்கல்கள் ஏற்படக் கூடும். நிதானமில்லாமல் டி வைட்டமினை அதிகமாக உட்கொள்வதனுல் குருதிக் குழாய் கெட்டியாகிவிடும்;நோய் ஏற்படக்கூடும். முதிய வயதில் பி6 வைட்டமின் (பேரிடோக்ஸின்) உபயோகித்தால் மிக்க அனுகூலம் கிடைக்கும். இதை ஒரு நாளுக்குக் குறிப்பிட்ட தடவைகள் (ஒவ்வொரு தடவையும் சுமார் 100 மில்லிகிராம் அளவு) மூன்று வாரங்களுக்குச் சாப்பிட்டால் மிகுந்த நன்மையேற்படும்.

முதிய வயதில் இரத்தச் சோகை ஏற்பட்டிருந்தால் வைட்டமின்கள் பி12, பி1, பி2, போலிக் அமிலம், நிகோடினிக் அமிலம் முதலியன சிறந்த பலனளிக்கும். இளம் வயதில் போஷாக்கான உணவுப் பொருள்களை உட்கொள்ளாவிடில், முதிய வயதில் அதனுல் பல சிக்கல்களும், ஆரோக்கிய நலிவும் ஏற்படும் என்று கட்டுரை ஆசிரியர்கள் எழுதியிருக்கின்றனர். அகால மூப்பு அடையாமலிருப்பதற்காக ஒருவர் இளம் வயதிலிருந்தே எச்சரிக்கையுடனிருக்க வேண்டும்.

சுவாச உறுப்புகளுக்கு அப்பியாசம் அளிக்கும் விதத்தில் இலேசான உடற்பயிற்சியும் அவசியமாகும்.

அகால மூப்பும் தளர்ச்சியும் அடைவதைத் தடுக்கவும், சிகிச்சை செய்யவும் புதிய முறைகளைக் கண்டுபிடிக்க விடாமுயற்சியுடன் பாடுபட்டு வரும் விஞ்ஞானிகளை மகத்தான கடமைகள் இன்னும் எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்றன.

★

நான் கண்ட அமெரிக்கா

[ஆர். காந்திமதி எம். ஏ., பி. டி.]

அமெரிக்க நாட்டிலே, காலையிலேயே ஆண் பெண் இருவரும் வேலைக்குக் கிளம்பும் பல குடும்பங்கள் உண்டு. அக் குடும்பங்களில் குழந்தைகள் தங்கள் பெற்றோரைப் பார்க்காமலேயே சில நாட்கள் தள்ளுவதும் அங்கு ஒரு அதிசயம் அல்ல. முதலில் நான் இருந்த வீட்டில் அந்த ஐயாவும், எஜமானி அம்மாளும் தத்தம் காரை எடுத்துக்கொண்டு வேலை நிமித்தம் காலை ஆறேகால் மணிக்கே போய் விடுவார்கள். பிறகு குழந்தைகள்தான் தாங்களே காலை ஆகாரத்தைத் தயார் பண்ணிச் சாப்பிட்டு, டிரெஸ் பண்ணிக்கொண்டு பள்ளிக்கூடம் போய்ச் சேர்வார்கள். அவைகளைக் கட்டுப்படுத்த பக்கத்தில் பெற்றோர் இல்லாத நிலையில் அந்தக் குழந்தைகள் தங்களுக்குள் ஏதாவது போட்டி போட்டுக்கொண்டு சத்தம் போடுவதையும் நான் பல நாட்கள் வெகுவாக ரசித்தது உண்டு.

நாலு பேர் இருக்கிற வீடாக இருந்தால் நமது தேசத்தில் காலை பலகாரம் காப்பி ஆவதற்குள் அமர்க்களம்தான்! காலை ஆறு மணிக்கே, எழுந்தவுடன் அடுப்பு மூட்டினால்தான் எட்டு மணிக்காவது எல்லாம் தயாராக இருக்கும். ஒரு நாள் இட்லி என்றால் வீட்டில் எல்லோருக்கும் அதேதான் நம் முறைப்படி. ஆனால் அங்கு அப்படி இல்லை. அவரவர்கள் இஷ்டப்பட்டதை ஐந்தே நிமிஷத்தில் தயார் பண்ணிக் கொள்ளலாம். அங்குதான் காலை ஆகாரத்துக்குக்கூட ஏற்கெனவே தயாரித்துத் தயாராக உள்ள கணக்கற்ற உணவுப் பண்டங்கள் கிடைக்கின்றனவே? ரொட்டியை வாட்டக்கூட மின்சார சாதனம் ஒன்று உண்டு. காலையில் எழுந்தவுடன் பெரியவர்கள், சின்னவர்கள், ஆண்கள் பெண்கள் அனைவரும் 'டிரெஸ்' பண்ணிக்கொள்ள வேண்டியது. பின்னர் அவரவர் தத்தம் இஷ்டப்படி சமையல் அறையில் நுழைந்து கால் மணி நேரத்துக்குள் தயாரித்துச் சாப்பிட்டு விட்டு ஓடிவிட வேண்டியது.

நான் இருந்த அந்த வீட்டில் அந்த எட்டு வயதுச் சிறுமிக்கு அவள் அம்மா ஒரு நாளாவது பலகாரம் தயாரித்து அவளை உட்கார வைத்துச் சாப்பிடச் சொன்னதை நான் பார்த்தது கிடையாது. அந்தக் குழந்தை எழுந்திருக்கும்போது வீட்டில் அப்பா அம்மா இருந்தால் தானே! இம்மாதிரி சிறு வயதி

விருந்தே பயிற்சி இருப்பதால் அமெரிக்கக் குழந்தைகளுக்குச் சாப்பாட்டு விஷயத்தில் அடமோ பிடிவாதமோ அழுகையோ கிடையாதென்றே சொல்லலாம். அத்துடன் பெற்றோர் துணை இல்லாமலே சுயமாகவே சாப்பிட்டுக் கொண்டும், தாங்களே டிரெஸ் பண்ணிக் கொண்டு பள்ளிக்குச் சென்றும் குழந்தைகள் வளர்ந்து வருவதால் அவர்களுக்கு, வாழ்க்கையில் எந்தக் கஷ்டத்தையும் தகர்த்து எறியக்கூடிய ஒரு தைரியமும், சுதந்தரமும் இருக்கும் என்பதை நீங்களே கற்பனை செய்து பார்த்துக் கொள்ளுங்கள்.

இங்கே நமது நாட்டில் பதினைந்து வயதுப் பெண்ணுக்குக் கூட அவள் அம்மாதான் தலை சீவிப் பின்னிவிட வேண்டும். எனக்குக்கூட பத்தாவது வகுப்புக்கு வரும்வரை எங்கள் அம்மா தான் பொட்டு வைத்து அனுப்ப வேண்டும்! இது நம்மிடை சர்வ சாதாரணம். அம்மா ஒரு நாள் தலை பின்னி விடாவிட்டால் அன்று குழந்தை பள்ளிக்கு 'லேட்' தான்! இங்கே சில "செல்லக்" குழந்தைகளின் தாய்மார்கள் பத்தாவது படிக்கும் பெண்ணுக்குப் பள்ளிக்கூடத்திற்கு வந்தே கூடச் சில வேளை சாதம் ஊட்டுவதையும் நான் பார்த்திருக்கிறேன். செல்லத்தை வேறு நல்ல வழியில் காட்டக் கூடாதா நம்மவர்கள்? பெற்றோருக்குத் தொல்லை இல்லாமலும், பாரமாக இல்லாமலும், வாழ்க்கையில் தைரியமாகத் தன்னை நடத்திக் கொண்டு போகவும் அமெரிக்கர்களிடமிருந்து, அவர்கள் குழந்தை வளர்க்கும் கலையிலிருந்து, நாமும் சிறிது கற்றுக் கொள்ளவேண்டி யிருக்கிறது!

இன்னொரு விஷயம்! அந் நாட்டில் குழந்தைகளுக்குப் பதினேழு அல்லது பதினெட்டு வயது ஆகும் வரை பெற்றோர் அவர்களுக்கு காப்பியோ, தேநீரோ அருந்த விடவேமாட்டார்கள் இவை குழந்தைகளின் வளர்ச்சியைப் பெரிதும் பாதிக்குமாம். கொக்கோ போன்றவற்றைத் தான் குழந்தைகள் பாலில் கலந்து சாப்பிடுவார்கள். நம் நாட்டுக் குழந்தைகள் காப்பி சாப்பிடுவார்கள் என அவர்கள் அறிய வரும்போது அவர்கள் கண்டிப்பாகத் துணுக்குறுவது சகஜம். பிரிட்டிஷ் தீவிலுள்ள ஆங்கிலேயருக்குத் தேநீர்தான் ஜீவநாடி போன்றது. ஆனால் அமெரிக்கருக்குக் காப்பி என்றால் உயிர். "உங்கள் நாட்டிலுமா அநேகருக்குக் காப்பிப் பைத்தியம்?" என்று என்னைக் கேட்டு ஆச்சரியப்படுவார்கள்! உலகிலேயே எங்கள் நாடு ஒன்றில்தான் காப்பி அருந்தப்படுகிறது என்பது அநேக அமெரிக்கரின் அபிப்பிராயம்! ஒரு சில இந்திய மாணவர்கள் அங்கே ஆத்திரம் தாங்க முடியாமல், "எங்கள் நாட்டில் நாங்கள் தயாரிக்கும் காப்பிக்கு முன் உங்கள் தயாரிப்பு நிற்காது. அத்துடன் நீங்களாவது காப்பியை பிரேஸில் தேசத்திலிருந்து

இறக்குமதி செய்ய வேண்டி இருக்கிறது. ஆனால், எங்கள் பூமியிலேயே காப்பி விளைகிறது'' என்று சொல்லவும் அவர்கள் தயங்க மாட்டார்கள். இதை நம்புவதற்குச் சில அமெரிக்கர் தயங்கவும் செய்வார்கள்.

"எல்லாவற்றிலும் தங்கள் தேசம் தான் முதன்மையானது'' என்னும் மனப்பான்மை அவர்களிடை பொதுவாக நிலவுகிறது என்பதைக் கண்டுபிடிக்க நமக்கு அதிக நாட்கள் பிடிக்காது. இதைக் கண்ணுற நமக்கே சிற்சில சமயம் அவர்கள்மீதுகோபம் கோபமாகவரும் என்பதில் சந்தேகம் இல்லை.

காலையிலும் மத்தியான சாப்பாட்டின்போதும் இரவு வேளைச் சாப்பாட்டின் போதும் கூட காப்பியையும் அவர்கள் அருந்தவே விரும்புகிறார்கள். எவ்வளவு பெரிய விருந்திலும் நடு நடுவே பரிமாறப்படுவதும் இந்தக் காப்பி தான். இல்லா விட்டால் சிலர் பச்சைப்பாலே அருந்துகிறார்கள். "குடிக்க இன்னும் கொஞ்சம் தண்ணீர் கொண்டுவா'' என்று நாம் கேட்கிற மாதிரிதான் அங்கு காப்பியின் நிலை. ஆனால் ஒரு மாறுதல்! பெரும்பாலான அமெரிக்கர் காப்பியை பாலோ, சர்க்கரையோ கலக்காமலேதான் சாப்பிடுகிறார்கள். அதனால்தான் அவர்கள் அருந்தும் காப்பி "டிகாஷன்'' கெட்டியாகஇருப்பதற்கில்லை. அதனால் இந்தியர்கள்தயாரிக்கும் காப்பிதான் சிறந்தது என்று கருதுவதில் என்ன தவறு?

நம்மில் சிலரைப் போல் மணிக்கு ஒரு தரம் காப்பி சாப்பிடுகிறவர்களும், அது இல்லாவிட்டால் தலைவலிக்கிறது என்று சொல்லுகிறவர்களும் அங்கும் இருக்கின்றனர்.

நமது அரசாங்க அலுவல் நேரம் காலையில் பதினொரு மணிக்குத் தொடங்குகிறது என்று கேள்விப் படும்போதும் அவர்களுக்கு வியப்பு ஏற்படுகிறது. காலையில் எழுந்தது முதல் ஆபீஸ் நேரம் வரை நாம் என்ன தான் செய்து கொண்டிருக்கிறோம் என்பதை அறிய அவர்கள் ஆவல் கொள்ளுகிறார்கள்.

சோறு வெந்ததும் வேகாததுமாகச் சாப்பாட்டை வயிற்றில் திணித்துக்கொண்டு ஆபீஸை நோக்கி ஓடும் நமது பழக்கமும் அவர்களிடம் கிடையாது. மத்தியானமும் ஏதோ லேசாகச் சாப்பிட்டு விடுவார்கள். நமது நாட்டில் மத்தியான வேளையில் சாதம் சாப்பிடுவோர் வயிறு புடைக்க உண்பது போல அங்கு இல்லை. மாலையில் நான்கு மணிக்கு நமக்கு இருக்கும் காப்பி டிபன் வேளையும் அவர்களுக்குக் கிடையாது. ஓயாமல் அந் நாட்டில் ஐந்தரை அல்லது ஆறுமணிக்கே மாலையில் நல்ல பலத்த சாப்பாடு. ஆங்கில நாடுகளில் உள்ளது போல அங்கே "தேநீர் நேரம்'' என்பது இல்லை; நாம் இரவு சுமார் எட்டு மணிக்குச் சாப்

பிடும்பலந்த சாப்பாட்டை அமெரிக்கர் மாலை ஆறரை மணிக்குள்ளேயே முடித்துக்கொள்கிறார்கள்.

அங்கு சென்றபோது, பொழுதோடு சாப்பிட்டு முடிப்பது எனக்குச் சங்கடமாக இருந்தது. அதனால் இரவில் பட்டினியாகப் படுக்கச் செல்வதுபோல் எனக்குத் தோன்றும். ஆபீஸ் நேரம் முடிந்து அமெரிக்கர் நொடிப் பொழுதும் தாமதியாது மின்னல் மாதிரி வீட்டை நோக்கித் தங்கள் கார்களில் ஓடிக் கொண்டிருப்பார்கள். பசி நேரம் அல்லவா? சாப்பாட்டை நினைத்துக் கொண்டு 'கண்ணு மூஞ்சி' தெரியாமல் காரை ஓட்டிக் கொண்டு செல்வார்கள் போலிருக்கிறது. இல்லாவிடில் நாள் முழுவதினும் மாலை ஐந்திலிருந்து ஆறு மணிக்குள் ஏற்படும் கார் விபத்துக்கள் தான் ஏன் அதிகப்படியாக இருக்கின்றன?

முதன் முதல் அமெரிக்க நாட்டில் குடியேற வந்த வெள்ளைக்காரர்கள் அதிக வசதிக் குறைவாக இருந்தபடியால், இருக்கும் உணவு நிலைக்குத் தக்கபடி, ஒரு வேளைக் காப்பியைக் குறைத்துக் கொண்டு, மாலை ஆறு மணிக்குள்ளேயே இரவுச் சாப்பாட்டை மேற்கொள்ள ஆரம்பித்தனர். அந்தப் பழக்கந்தான் இப்போது வேறுன்றி அந்நாடு முழுவதும் கடைப் பிடிக்கப்பட்டு வருகிறது. ஆகக்கூடி, மொத்தத்தில் அமெரிக்கருக்கு மூன்று வேளைச் சாப்பாடு என்றே சொல்லலாம்! எனக்கு இருந்த நண்பர்கள் அனைவரின் வீட்டிலும் இரவு ஏழு மணிக்குள்ளேயே பாத்திரங்களைக் கழுவி அலமாரியில் அடுக்கி விட்டுத்தான் வெளியில் வருவார்கள்.

பெரும்பான்மையான அமெரிக்க இல்லங்களில் வேலைக்காரியோ சமையல்காரியோ கிடையாது என்று முன்னமேயே உங்களுக்குச் சொல்லியிருக்கிறேன். அப்படியென்றால் எல்லோரும்—குழந்தைகள் உள்பட—சேர்ந்து உழைத்தாலொழிய வீட்டுக்காரியங்கள் அன்றாடம் சரியாக நடைபெறுவதற்கில்லை. அந்தச் சிறுமிகள்தான் எத்தனை சமர்த்தாக, பெற்றோர்கள் இல்லாத போதும் வீட்டுவேலைகளைச் சரிவரக் கவனிக்கின்றனர்? அது ஆச்சரியந்தான்.

அமெரிக்கப் பெற்றோர்களுக்கும் தங்கள் குழந்தைகள் மேல் அளவற்ற பாசம்தான்! சந்தேகமே இல்லை! நமது நாட்டில் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளிடம் வைத்திருக்கும் அன்பிற்கு அமெரிக்கர்கள் தங்கள் குழந்தைகள்மீது வைத்துள்ள அன்பு ஒன்றும் குறைந்ததில்லை. இருப்பினும் இந்தப் பாசத்தை வெளிப்படையாகக் காட்டும் விதத்தில்தான் நாம் அவர்களிடமிருந்து வேற்றுமைப் படுகிறோம்.

முக்கியமாக, பெண் குழந்தைகளின் மீதுள்ள ஆசையினால் நமது பெற்றோர்கள் அவர்களை அடுப்பண்டை கூட நெருங்க

விடுகிறதில்லை. அத்துடன் பாத்திரம் தேய்ப்பதிலோ, துணி துவைப்பதிலோ, கடைக்குச் சென்று சாமான்கள், கறிகாய்கள் வாங்குவதிலோ பள்ளிக்கூடம் செல்லும் நம் பெண்களுக்குப் பெரும்பாலும் ஒன்றுமே தெரியாது. படிக்கும் பெண்களுக்கும் வீட்டு வேலைக்கும் நாம் இந்த நாட்டில் சம்பந்தப்படுத்தியே பார்ப்பதில்லை. அப்படியே தப்பித் தவறி ஒரு பட்டதாரிப் பெண்ணுக்குச் சமைக்கத் தெரிந்தால் நாம் அதை அதிசயமாகவே கருதி மெச்சிக்கொள்வோம்!

வீட்டு வேலைக்காரிதான் நமக்குச் சுற்றுப்பட்ட வேலைகளைச் செய்யவேண்டுமே யொழிய, மற்றபடி வீட்டுக் குழந்தைகளை நாம் ஒன்றும் ஏவ விடுவதில்லை. வேலைக்காரி ஒரு நாள் வராவிட்டால் வீட்டில் நான்கு பெண்கள் இருந்தாலும் காரியங்கள் செய்யத் திண்டாட்டந்தான். தங்கள் பெண் துடைப்பம் எடுத்துப் பெருக்கினாலேயே கௌரவக் குறைவு என்று நமது நடுத்தர வகுப்பைச்சேர்ந்தோரும், செல்வந்தர்களும் நினைக்கின்றார்கள். இதுதான் நம் மக்களில் சிலர் "செல்வம்" "பாசம்" என்னும் பெயரால்குழந்தைகளுக்குவாழ்க்கையில் அளிக்கும் நற்பயிற்சி!

ஆனால், அமெரிக்க நாட்டில் "உழைப்பின் உயர்வு" எவ்வளவு தூரம் மக்களால் போற்றப்படுறது என்பதைக் காண ' பிரமிப்பாகத்தான் இருக்கிறது. ஒரு அமெரிக்கப் பெண்ணுக்குப் பதினைந்து வயது ஆவதற்குள்ளேயே அம்மாவுக்குத் தெரியும் அத்தனை வீட்டுக் காரியங்களும் தண்ணீர் பட்டபாடுதான். அச்சிறுமி கடைக்குச் செல்வாள்; துணிமணி, மளிகை சாமான் முதலியனவும் பார்த்து வாங்கத் தெரியும்! பாங்கிலும் போய் பணம் போட்டு வாங்கத் தெரியும்! தபால் ஆபீஸ் போய் மணியார்டர் பண்ணவும் அறிந்து வைத்திருப்பாள். சைகிள் விடவும் தெரியும், கார் ஓட்டவும் பழகிக் கொண்டிருப்பாள். பெற்றோர் ஒருவாரம் வெளியூர் சென்றிருந்தால், அந்தச் சிறுமியே தன்னந்தனியாகத் தன் குட்டித் தம்பி தங்கைகளைப் பார்த்துக்கொண்டு, பத்திரமாகக் குடும்பம் நடத்தவும் தைரியம் படைத்திருப்பாள். எவ்வளவு தொலை தூரமானாலும் தனியாக ரயிலிலோ, பஸ்ஸிலோ தானே டிக்கெட் வாங்கிக் கொண்டுபோகவும் தயங்கமாட்டாள்.

சினிமா, டிராமா, நடனம், எக்ஸிபிஷன் முதலியனவற்றிற்கும் அவளுக்குத் துணை தேவையில்லை. ஊரிலுள்ள அத்தனைவிதமான கடைகளும் அவளுக்குத் தெரிந்ததுதான். இவையெல்லாம் அவளுக்கு ' முனையி லிருந்தே அளிக்கப்படும் பயிற்சியின்முடிவு என்பதை நான் இங்கே எடுத்து விளக்கத்தேவை இல்லை. பெண்களே இவ்வளவு துணிவுடன் இருந்தால் ஆண் குழந்தைகள் எத்தகைய தன்மையுடன் அங்கே வளர்ந்து வருவார்கள் என்பதை

உங்கள் கற்பனைக்கே விட்டு விடுகிறேன்.

பள்ளிக்கூடம் விட்டுச் சிறிது நேரத்திற்குள் பெண் வீடு வந்து சேராவிட்டால் நம் பெற்றோர்கள் கலக்கத்துடன் பள்ளிக்கு வந்து விசாரிப்பதைப் பார்த்திருக்கிறோம். ஆனால், அங்கே எனது மாணவ மாணவிகளைப் பள்ளிக்கூடம் விட்ட பிறகு எந்தக் கடை கண்ணி, ஹோட்டலிலும் பார்க்கலாம். ஆறு வயதுப் பெண்கூட தனியே ஹோட்டலில் நுழைந்து, மேஜையில் உட்கார்ந்து தனக்கு வேண்டியதை ஆர்டர் பண்ணிச் சாப்பிடுவது அங்கு சகஜம். எவ்வளவோ பெரியவர்கள் உட்கார்ந்து அங்கே சாப்பிட்டுக் கொண்டிருக்கலாம். இருப்பினும் அந்தச் சிறுமிகள் வெண்கலக் கடையில் யானை புகுந்த மாதிரி தான் நுழைந்து, அட்டகாசமாகச் சாப்பிட ஆரம்பிப்பார்கள்.

சிறுவர்கள்தானே என்று நினைத்து அந்த ஹோட்டல் சிப்பந்திகள் அவர்களைக் காக்க வைத்தாலும் சும்மாவிட மாட்டார்கள். துரிதமான சேவையும் அங்கே சமத்துவமாகத்தான் அளிக்கப்படுகிறது. சுற்றியுள்ளோரையும் அந்தச் சிறுவர்கள் லட்சியம் செய்தால் தானே! "சத்தம் போடாதீர்கள்" என்று அந்த ஹோட்டல் சிப்பந்தியோ, மானேஜரோ சொன்னால் அவ்வளவுதான்! சிறுவர்கள் தீர்த்துக் கட்டி விடுவார்கள்.

இது விஷயம் குறித்த ஒரு சம்பவம் என் நினைவிற்கு இப்போது வருகிறது. நான் இருந்த அந்தப் பெரிய பட்டணத்தில் எங்கள் பள்ளிக்கூடம்தான் மிகப்பெரியது. எங்கள் பள்ளிக்கு ஒரு சில கெஜ தூரத்தில் பிரபல ஹோட்டல் ஒன்று இருந்தது. மத்தியானம் இடை நேரத்தில் பள்ளி மாணவர்கள் சாப்பிடப் போகையில் இந்த ஹோட்டலில் அமர்க்களமாக நுழைந்து விடுவார்கள் போல் இருக்கிறது. இதைக்காண அந்த ஹோட்டல் முதலாளிக்கே பொறுக்க முடியாது போய்விட்டது என்றே நினைக்கிறேன். அவரும் எத்தனை நாளைக்குத்தான் பொறுத்துப் பொறுத்துப் பார்த்தாரோ, ஆண்டவனுக்குத் தான் தெரியும். அந்த மாணவர்களால் அந்த ஹோட்டலுக்கு வாடிக்கையாக வரும் பொது ஜனத்திற்கும் நிம்மதியற்றுப் போய் விட்டதாம்.

உடனே எங்கள் பள்ளிக்கூட பிரின்ஸிபாலுக்கு அந்த மாணவர்கள் இடை நேரத்தில் மட்டும் தன் ஹோட்டலுக்குச் சாப்பிட வரவேண்டாம் என்றும், வேறு எங்கேயாவது அவர்கள் போய்க் கொள்ளலாம் என்றும் உத்தரவு பிறப்பிக்கும்படி வேண்டி அந்த ஹோட்டல் முதலாளி எழுதி விட்டார். இதன் விளைவாக அந்த இடத்தில் இடை நேரத்தில் எந்த மாணவன் மாணவி போனாலும் கூட அந்த ஹோட்டலில் பரிமாறமாட்டார்கள்.

Edited Printed and Published by P. VEERARAGHAVAN,
at Venkatesan Press 2/65, Broadway, Madras-1.